5 305

உ

பரமபதி துணை.

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்திய சூஸ்திரமும்,

5

# வாதசூஸ்திரம்நாம்

இவை

மதுரை பானைக்கல் தெரு வித்துவான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களாற்ரமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

விலை ] 1924 [ ரூ 1

இரண்டாம் பதிப்பு.

5 305

உ

பரமபதி துணை.

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்திய சூஸ்திரமும்,

5

# வாதசூஸ்திரம்நாம்

இவை

மதுரை பானைக்கல் தெரு வித்துவான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

விலை] 1924 [ரூ. 1

இரண்டாம் பதிப்பு.

உ

குமரன் றுணை.

S 308

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்திய சூஸ்திரம்

திருவிருக்கும் பொதிகைமலை தன்னில்வாழும்-தெட்சணா மூர்த்திகுரு பதத்தைப்போற்றி, கருவழலை உருவெடுத்த மார்க்கஞ் சொல்லக்-கரிமுகனும் அறுமுகனுங் கமலத்தாளும், இருவினையை உருப்படுத்தும் வேதன்தேவி-இன்பமுட னிவர்களுட பதத்தைப் போற்றி, அருவுருவாய் விளங்கிமனத் தறிவாய்நின்ற-அப்பொருளை யெப்பொருளும் அறிவோர்காப்பே. (1)

சித்தரெல்லாம் கருவழலை பிடித்தே ஆட்டிச்-செகம்விளங்க நூல்காட்டி வேதைபோட்டார், முத்தரெல்லாம் கருவழலை பிடித்து நித்தம்-முனைகண்டு சுழிமுனையின் முடிவிற்சேர்ந்தார், பத்தரெல்லாங் கருவழலைத் திரமேசெய்து-பார்விளங்க நதியாடி முத்தி பெற்றார், சுத்தமது கருவழலை குருவாற்கண்டு-சோதிபார் வெளியாகத் தோணுந்தானே. (2)

தானென்ற கருவழலைப் பேர்தான்சொல்லத்-தாணிதனி லாரறிவார் தானேதானும், வானென்ற புவியேழும் நிறைந்தேயெங்கும்-மறைபொருளாய் நின்றகரு வழலைதன்னைக், கோனென்ற குருபதத்தை யடுத்துநித்தம்-குறிப்பாக நிழற்போலே காத்தபேர்க்குப், பானென்ற அமுதமங்கே கொடுத்துஉன்னைப்-பார்த்துமன மிரங்கியருள் புரிவார்காணே. (3)

காணவே வழலையுட பிறப்பைச்சொல்லார்-கருவாளி நீயானுற் கண்டுகொள்வாய், தோணவே நகாரமதுக் காதிபீடம்-சொல்லார்கள் மால்நிறமா மீனமேறிப், பூணவே வளர்ந்திருப்பார் மதியினுலே-புகழ்பெரிய கதிரவனு லழிந்துபோவசர், நாணமில்லா அகாரத்தைப் பற்றிமேறி- நடுவிருந்த ஆசானைக் கண்டுதேறே (4)

தேறுவது யாரென்றால்சித்தன் சித்தன்-செகமதிலே வாழ்ந்திருப்பார் யோகம்பெற்றோர், ஆறுவது யாரொன்றால் வழலைதன்னை அடக்கிமன தொன்றாகி யறிவிற்சேர்க்தோர், கூறுவது அதன்பெருமை மெத்தவுண்டு-தடிலமது அதின்குணத்தைக் கூறக்கேளு, மாறுவது முக்குணமாய் விளங்கியெங்கும்-மகாமாயை யாகிநின்று வளரும்பாரே. (5)

பாருநீ அஞ்சுடனே கூடிவாழும்- பார்த்திருக்க ஒன்றை விட்டே ஒன்றிற்சேரும், காருநீ வழலையுட கருவேயாகும்-கைமுறையா யெடுத்தடைப்பாய் கலசத்துள்ளே, வாருநீ சுத்தமிசெல மாசான்சொன்ன-மார்க்கமது கைமுறையாய்வடித்துக்காச்சு, சேருநீ வழலையுடன் மூன்றைக்கூட்டிச்-சிறுபுடமாய்ப் போட்டெடுக்கக் குருவுமாச்சே. (6)

ஆச்சிந்த வழலையுட மார்க்கமெத்த - ஆடலாங் கவர்கோடி வித்தையெல்லாம், போச்சிந்த வழலையுட குருவைவிட்டாற் பூரணமாய்ப் பிறப்பெல்லாம் பொன்னதாச்சு-ஏச்சிந்த வழலையுட புறட்டினாலே—ஏழுவகைத் தோற்றங்கள் கெடுதலாச்சு, வாச்சிந்தவழலை குருச் செய்தபேர்க்கு-மகத்தான பிறப்பறுத்து வாழலாமே (7)

வாழலாம் எட்டுடனே நாலைச்சேர்த்து—மாளமட்டும் அரைத் தெடுத்துப், புடத்தைப்போடு, தேளடா பிறவியென்ற சரக்கையெல்லாம்-சென்றவுடன் கொன்றுவிடும் திறமோமெத்த, வாழலாம் தரித்திரிய மெல்லாம்போச்சு—மனமான வழலையுட சுண்ணப்போக்கு, நாளடா திங்களொரு கணமேஆகும்- நாதாந்த மனோமணித் தாய் சொன்னாள்பாரே. (8)

சொன்னாளே பொதிகைகுரு முனிவனுக்குச் சூட்சமெல்லாமவருரைத்த நூலைப்பாரு, என்னாளோ எவ்யுகமோ அவர்தானையா- இருக்காரே பொதிகைமலை தன்னில்மேவி, வண்ணானே கண்டெடுத்த வழலைப்போக்கை-வகையுடனே கண்டுரைக்க வகையோவில்லை மூன்னாளில் விட்டகுறை தொட்டபேர்க்கு—மோசமில்லை வழலை குரு வாகும்பாரே. (9)

குருவான வழலையுட போக்கையெல்லாம்-கூறுகிறேன் நகாரத்திற் றெட்டுப்போடக், கருவாகக் கட்டிப்போம் பூதமஞ்சுங்கைகண்ட வித்தையிது கருதிப்பாரு, திருவான சரக்குபொருதொண்ணூற்றாறும்-திறங்கட்டிப் பெலனாகும் உற்றுப்பார்த்தால், உருவாக உன்னைவந்து காத்துநித்தம்-உண்மைபர வெளிதனிலே ஒடுங்கும்பாரே. (10)

பாருநீ கால்தலையில் வழலைச்சுண்ணம்-பட்டவுடன் அப்புடனே ரவியிற்கட்டும், காருநீ குருபதத்தைக் கூட்டிக்காரு - கற்பமென்ற மாயையெல்லாங் கழன்றுபோகும், சேருநீ வழலையுட கருவைக் கண்டு-சேர்ந்தாட அறிவன்றிப் போதமுண்டோ, ஆருநீசொன்னாலும் அறியமாட்டார்-ஆனந்த மனோமணித்தாய் அறிவிப்பாளே. (II)

பாளான களிம்பறவே வழலைச்சுண்ணம்-பணவிடை தானீய்ந்தாக்காற் சுத்தியாச்சு, நாளானசெந்தூரங் களங்குபற்பம்—நலமயன மெட்டுபரி சனமாம் வேதை, கோளான பிறவியொடு அட்டகர்மம்-கொழுகிநின்ற வழலையுட குருவைவிட்டாற், பாளாகும் இதையறிந்து கண்டால்முத்தி-பலிக்குமடா யீராறு படிக்கமுற்றே (12)

முத்திதருங் கும்பமுனி பதத்தை நித்தம்-முனைமூக்கு மத்தியிலே ஊணிப்பாரு, சித்திதரும் புத்திதருங் கர்மம்போகும்-செகசால மாயையெல்லாந் தீருந்தீரும், பத்தியுட ஞசாலை நித்தங்காரு-பணிவிடைகள் தப்பாமற் பாரு பாரு, அத்திபுரம் மூலவட்ட மையன்கோவில்-அடையாளம் அதன்பெருமை அறிவாற்காணே. (13)

புலஸ்தியர் வைத்திய சூஸ்திரம் ௰௫

முற்றிற்று.

உ

தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய் மொழிந்தருளிய
ஞான யோக சாஸ்த்திர ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவில் (வடக்கு ஆடி வீதி,)
மதுரை.

ஸ்தாபகர்:-
ந. சுப்பிரமணியபிள்ளை என்ற ஞானபண்டிதசுவாமி

உ

சிவமயம்

புலஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

# வாதசூஸ்திரம் நூ.

ஆதியந்தம் நிறைந்ததொரு சோதிபாதம்-அன்பான ரிஷிகளுட பாதம்போற்றி, நீதிபா யெனையாண்ட வகத்தீசர்பாதம்-நினைந்துருகிப் போற்றிசெய்து நேர்மையாகச், சோதியெனு மம்பிகைப்பெண் பாதம்போற்றித்-தொல்லுலகில் ரசவாதம் நிலைக்க வேண்டி, பாதிமதி சடையணிந்தோர் பாதம் போற்றிப்-பகருகிறேன் சூஸ்திரமுந்நூறுந்தானே. (1)

தானென்ற கும்பியெழு நூறுஞ்சொன்னேன்-தாஷ்டிகமாயைந்நூற்றிற் பாகஞ்சொன்னேன், வானென்ற அதைக்குறுக்கி முந்நூறாக-வகையாகக் கைபாகம் வரிசையாக, நானென்ற வுலகத்தோர் வாதஞ்செய்து-நலமாகப் பிழைக்கும்வகை நன்மையாக கோனென்ற குருவருளால் வாதக்காடு-குணமாக அறிந்தவர்க்குக் கொள்ளைதானே. (2)

கொள்ளையாம் லிங்கபற்பம் அயத்தின்செம்பு-குணமான மெழுகோடு தைலப்போக்கு, சள்ளையிதி லில்லாமல் வீரப்போக்கு-சரியான கட்டுவகை செந்தூரங்கள், வள்ளலார் கைபாகம் வரிசையாக வடிவான சூதபற்பங் கற்பூரங்கள், உள்ளபடி சொல்லுகிறேன் உலகந்தன்னில்-ஓகோகோ யிந்தநூ லுறுதிபாரே. (3)

லிங்கரச பற்பம்.

உறுதியாய் முன்னேதான் லிங்கபற்பம்-உகந்துநீ வைத்திடுவாயுலகத்தோர்க்கு, அறுதியாய்ப் பலபிணிகள் தீர்த்துவிட்டு-ஆண்மையாஞ் சீவனத்தைப் பண்ணிக்கொண்டு, உறுதிபெற ரசவாதம் யோகமார்க்கம்-உற்பனமாய் ஞானமொடு வழலைபாகம், கருதியே யிடைபாகம் செய்பாகந்தான்-கைபாகஞ் சொல்லுகிறேன் நடத்தைப்பாரே. (4)

நடத்தைப்பார் சண்டரச பற்பங்கேளு-நலமாக படிக்களத்தில் நிற்கும்பாகம், கிடத்திலிட்டு பெரிக்கிறதோர் பாகமாகுங்-கீர்த்தியாய்ப் பலபிணிகள் தீரும்பாகம், மடபதிகள் மறைத்ததோர் பாகமெல்லாம்-மயங்காமல் பசலைக்குத் தோணும்பாகம், திடத்துடடே புவியிலுள்ளோர் பிழைக்கச்சொன்னேன-திறமாக வைத்தியர்க்கு ஆணியாமே. (5)

ஆணியாம் லிங்கமது சேர்தானென்று-அடைவாகக் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி, காணியாங் கொடிவேலி ரெண்டுசேரு-காரணமா யிடித்துநீ தெள்ளிக்கொண்டு, வாணியாம் பொடியாக்கி லிங்கத்திட்டு-வடிவாக ரெண்டுமொன்று யரைத்துத் தூளாய், காணியாய் கடத்திலிட்டு மேலேமூடி-நலமாகச் சீலைமண் வலுவாய்ச் செய்யே. (6)

செய்துநீ வாலையென்ற அடுப்பிலிட்டுச்-செயமாக நாற்சாமம் எரித்துவாங்கு, நய்துமே தீயாற்றி யெடுத்துப்பாரு-நலமாக வாலை ரசம் மேலேநிற்கும், எய்துமே வழித்ததனை யெடுத்துக்கொண்டு, இதமாகத் துணிதனிலே விட்டுகேளு, உய்துமே பிழிந்திட்டுக் கல்வந்தன்னில் - ஒழுங்காக விட்டுநீ நாட்டக்கேளே (7)

புகைநீர்

நாட்டமாய்ப் புகைநீரு வொன்றுகேளு- நலமாக வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல், வாட்டமாய்ப் பலம்பசது நிறுத்துக்கொண்டு வடிவாகச்சீனமது யிருபத்தினலு, கூட்டயாய் ரெண்டுமொன்று யிடித்துக்கொண்டு-குணமான வாலையென்ற சட்டியிட்டு, மூட்டவே வாலைதனை மூடிமைந்தா-முனிவாகச் சீலைமண் செய்திடாயே (8)

சீலையென்ற மண்ணதுவே செய்தபின்பு-சிறப்பாக வடுப்பேற்றித் தீயைமூட்டி, வாலையென்ற தீநீரு முன்னேவெள்ளை-வடிவான வெள்ளைதனை விசிப்போடு, காலையென்ற புகைமஞ்சள் நீருமாகும் கனிவான மஞ்சள்நீர் தன்னைவாங்கு, வாலையென்ற சூதத்தைக் கல்வத்திட்டு- வடிவான புகைநீரை விட்டுக்கேளே. (9)

விட்டுமே சூரியனில் வைத்தபின்பு-விதமாகக் காளான்போற் பூத்துநிற்கும், வட்டுமே பூத்ததெல்லா மெடுத்துக்கொண்டு-வடிவாகப் புகைநீரை விட்டுவாநீ, கட்டுமே பின்பொருக்கால் பூத்துநிற்கும்-கனிவாகப் பூத்ததெல்லாங் காயவைத்து, நட்டுநீ சீனமது சேருவாங்கு-நலமான வண்டோடுஞ் சேருதானே. (10)

## அண்டச்சுண்ணம்.

தானான அண்டோடு சுத்திகேளு-தனியான உவர்மண்ணுஞ் சுண்ணம்நேரே, வானாக ஓடுதனி லிட்டுக்கேளு-வரிசையாய்க் குமுரவெரி கழுவிப்போடு, கானான சுத்திசெய்த அண்டவோடு-காதலாய்ச் சேரொன்று சீனக்காரம், தானான சேரொன்று கல்வத்திட்டு-தன்மையாய் ரெண்டுமொன்றா யரைத்திடாயே (11)

அரைத்திடவே பழச்சாற்றால் சாமம்நாலு-அதைக்காயவைத்தபின் புகேளு, பரைத்திடவே வெண்கருவால் நாலுசாமம்-பதிவாகக் காயவைத்து வில்லைதன்னை, மரைத்திடவே பெரியபுடமிட்டுத்தீரு-மயமாகச் சீனமது பொங்காதப்பா, குரைத்திடவே சுண்ணமது வாகும்பாரு-குணமான கைபாகம் வரிசைதானே. (12)

தானென்ற கடுஞ்சுண்ணஞ் சீனச்சுண்ணந்-தாவ்ஷ்டிகமாய்ச் சகலதுரை யிதற்குள்ளாச்சு, வானென்ற முன்னேதான் பூத்துநின்ற-வாலைரசந் தானெடுத்துப் பூத்தபூவை, நானென்ற சேரொன்று நிறுத்துக்கொண்டு-நலமான சீனமது சுண்ணம்நேராய், கோனென்று தானெடுத்து ரெண்டுமொன்றாய்க் குணமாகக் கல்வத்திலிட்டுக்கேளே. (13

இட்டுமே புகைநீராற் ஜாமமாட்டு-இதமாக வில்லைதட்டி ரவியிற்போடு, பட்டுமே காய்ந்தபின்பு பகரக்கேளு-பதிவாகக் கிடத்திலிட்டு மேலேமூடி, நட்டுமே மண்சீலை வலுக்கச்செய்து-நாடாமற் றீயெரிப்பாய் நாலுசாமம், கட்டுமே யிருந்திடுங்காண் அடியிலேதான-தனிவாக வாலையென்ற சூதந்தானே. (14)

தானென்ற சூதமது வுபரமேபோற் தாவ்ஷ்டிகமா யிருந்துவிடும் அடியிலேதான், கோனென்ற குருவருளாம் பதத்தைப்போற்றிக்-குணமான சாதிலிங்கஞ் சுண்ணமாச்சு, வானென்றவெங்குருவா மகத்தியர்தானும்-வடிவாகச் சொல்லவில்லை வழக்காய்ச்சொன்னார், நானென்ற ஆணவத்தால் வெளியிற்சொன்னேன்-நலமாக யிக்குருவை நயந்துகாணே. (15)

## லிங்கரச பற்பம்.

காணவே சாதிவெல்லந் தன்னிலேதான் - கால்களஞ்சி யிட்டுஅந்தி சந்திகொண்டால், தோணவே நாளாறு வுண்டபோது-துடியான பத்தியங்க ளில்லையப்பா, வாணவே தீருகிற நோய்கள் தன்னை-வடிவாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு, ஆணவே பேதிபொடு சோகைமாலை-அட்வாகச் சூசிகவாய் வதுவும்போமே. (16)

போகுமே மாலையொடு சோகைதீரும்-பொல்லாத யீளையொடு பிரமல்தீரும், ஆகுமே மூலமொடு கிராணிபோகும் - அடங்காத வாதமொடு பித்தம்போகும், பாகுபெற வலிகுன்மம் பித்தகுன்மம்—பாங்காகத் தொந்தமாங் குன்மம்போகும், வாகுபெற சிலேற்பனங்களெல்லாம்போகும்-வடிவான காயமது கற்றாணுமே. (17)

நாமென்ற மகோதரங்க ளெல்லாம்போகும்—நடுங்குமே காமாலை பித்தப்பாண்டும், தாமென்ற கருமேகக் குஷ்டமெல்லாம்—தன்மையாம் பெருவயிறு யிரைப்புநீக்கும், வாமென்ற தலைவலியும் மண்டைக்குத்தும்—வடிவாகச் சொன்னநோ யனைத்தும் போகும், ஆமென்ற குருவருளாற் சொல்லிவிட்டேன்-அப்பனே குணமாகுங் கூர்ந்துபாரே. (18)

லிங்கரச பற்பவேதை.

கூர்ந்துபார் முன்னேதான் பண்டிதத்தைக் - குணமாகப் பார்த்துநீ பின்னேதானும, வார்ந்துமே வாதமது செய்துதீரு-வடிவாக யிக்குருவைக் கொடுக்கும்பாகம், தேர்ந்துபார் கும்மிதனில் தைலச்செம்பு-திடமாகச் சொல்லிவிட்டேன் செம்புதன்னை, சார்ந்துமே யெடுத்துநீ வுரிக்கிக்கொண்டு-சரியான வாலைகுரு வொன்றுதாக்கே.

தாக்கிடவே மாத்தென்ன பத்துமாகுந் -தாஷ்டிகமா யுப்புக்குங் காவிக்கப்பா, வாக்கிடவே யோடாது வொளித்திடாது - வடிவாகக் கொண்டுஜீ வனத்தைப்பண்ணு, பாக்கியமாய்ச் செய்துநீ யோகம்பாரு-பதிவாகக் காயசித்தி பண்ணித்தேறு, தூக்கிடவே சொன்னசொல்லு தப்பாதப்பா-துடியாகச்சகலசித்துஞ்சித்தியாமே

சித்தியாம் வாலைரசம் வைத்துநீயுஞ்-சிறப்பாகவோடாமற்சுன்னமாக்கி, சத்தியாங் குளிகைதனைக் கட்டிக்கொண்டு-சாரியாய்ஞான வழி யடுத்துக்கூடு, புத்தியாய் சாஸ்திரத்தைக் கூர்ந்துபாரு-பொருளான சகலசித்தும் ஆடலாகும், பத்தியாய் நினைவுதான் வைத்துத்தேர்ந்து-பதிந்துமனஞ் சாஸ்திரத்தின் பண்பைப்பாரே. (21)

பண்பாக வைத்தியர்க்கு யிதுவேயாதி- பகலிரவாய்க்கைபாகம் அறியவேணும், உன்பாரைப்பார்த்துநீ திரியவேண்டாம்-உற்றுமே சாஸ்திரத்தை நம்பிப்பாரு, கண்பார்வை யாகவே சூதந்தன்னைக் கனிவாகக் கட்டியே சுன்னம்வைத்து, நண்பாக வுண்டுவர வியாதி போகும்-நலமாகப் பின்பெல்லாம் நயர்துபாரே. (22)

வாலைரச மெழுகு.

பாருநீ வாலைரச மெழுகுதன்னைப் பண்பாகச் சொல்லுகிறேன் பரிந்துக்கேளு, காருநீ வாலைரசம் பலமும்ரெண்டு-கனிவாக நிறுத்துமே வைத்துக்கொண்டு, சாருமே வேப்பிலைதான் சேருநாறு-சாட்சியாய்க் குறுகவே நறுக்கிக்கொண்டு, வாருமே பெரும்பாண்டத்துள்ளேயிட்டு-வடிவாக நல்லதண்ணீர நிறையவாரே- (23)

வாரேநீ யடுப்பேற்றி, பெரிநோபாகம்-வடிவாக யிலைசுவர வெரித்துக்கொண்டு, சீரேநீ செய்வாயே சொல்லக்கேளு - சிறப்பான கம்பிளியில பிழிந்துகொண்டு, காரேநீ கிட்டிகட்டி பிழிந்துகொண்டு - கனிவாகஅடிகனத்த சட்டிதன்னில், பாரேநீ விட்டுநீ யடுப்பிவிட்டுப்-பதிவாக வாலையென்ற சூதம் விட்டே. (24)

விட்டுநீ பொங்காமல் பதமாகத்தான்-விதமாக யெரித்திடவே குழம்புபோலே, கட்டுமே யெரித்திட்டு வழித்துக்கொள்ளு-நலமாகக் கல்வத்தி விட்டுத்தானும், மட்டுமே யிருசாமம் நன்றாயாட்டி-மயமாக வாலைரசம் மெழுகாயிற்கும், கட்டுமே மெழுகெடுத்துப் பலமும்பத்து-கனிவாக வாளமது வொன்றுதானே. (25)

ஒன்றுகுஞ் சுத்திசெய்து கூடச்சேர்த்து-உறவான பெருங்காரம் பலமுஞ்சேர்த்து, நன்றாகச் சிவதைவேர் பலமுமொன்று-நலமாகச் சுக்கொன்று மிளகுமொன்று. வன்றாகயிவையெல்லாம்நிறுத்துக்கொண்டு-வகையாக ரசமெழுகோ டொககச்சேர்த்து. அன்றே நீயரைத்திடுவாய்சாமம்நாலு-அடைவாகஅரைத்துநீவழித்திடாயே

அரைத்துடனே வழித்ததையுஞ் சிமிழில்வைத்து-அடைவாக வயிரவர்க்குப் பூசைபண்ணி, பரைத்துடனே பரைதனக்கும் பூசைசெய்து-பதிவாக மெழுகெடுத்துப் பணந்தான்வீதம, கரைத்துமே கொடுக்கின்ற வரிசைகேளு - கருவாகக குன்றுமணிப் பிரமாணந்தான், உரைத்து நீ கொடுத்திடவே தேனில்தானும்- உற்பனமாய்த் தீருகிற நோயைக்கேளே. (27)

தீருகிற நோயென்ன சொல்லக்கேளு-திறமாகக் குன்மமுதல வாதரோகம், பேருலகிற் பித்தமெல்லா மோடிப்போகும்-பேதமறும் ரசமெழுகைக் கண்டாயானல். காருகிற கடல்போலே நோய் கவர்ந்துங்-கருதினல் ரசமெழுகை யுண்டபோதே, ஆருமே யறியாது ஓடிப்போதும்-அண்டபகிரண்டமெல்லா மாடலாமே. (28)

ஆடுமே வாலைரச மெழுகைக்கண்டால் - ஆடலாமொருகோடி வியாதிபோகும், கூடுமே கூட்டறிந்தால் சித்தியாச்சு - குணமாக அறியாட்டால் குணமொன்றில்லை, தேடுமே தேட்டெல்லாம் ரசத் திறலை- இடமான பற்பமெல்லாம் பாகத்தாலே, பாடுமே பாட்டெல்லாம் மார்க்கத்தாலே-பரிகாரம் பண்டிதத்தைப் பணிந்துபாரே.

பணிந்துபார் பெரியோர்கள் நூலைத்தானும்-பண்பாக மனம் பூண்டு பழக்கம்பண்ணு, துணிந்துபார் முன்னூற்றை யறிந்துபாரு, துணிவாகப்பண்டிதந்தான் நிலைத்துப்போகும். தணிந்துபார் சண்டாளர்க்கெய்தவாறு.தரஷ்டிகவான் கோடியிலே யொருவனுண்டு, பிணிந்துபார் பிணிபறிந்து மருந்தையீய்ந்தால் - பேர்சொல்லாப் பிணிகளெல்லாம் தீர்ந்துபோமே. (30)

தீர்ந்துபோம் வாலைரச மெழுகைவைத்துத் - திடமாக யுண்டிடவே ரோகமெல்லாம், கூர்ந்துமே கடல்புக்கும் வினைகளெல்லாங் குதியில்லாதோடிவிடுங் கருதிப்பாரு, ஓர்ந்துமே புளியுப்பைத் தள்ளிப்போடு-யுகமுந்து பலபிணிகளோடிப்போகும், சேர்ந்துமே நோயெல்லாந் தவுடுபொடியாகும்-சித்தர்கள் தம் சொல்மொழியை நாடிப்பாரே. (31)

பாடுமே னூலைவிட்டுப் பண்டிதத்தைப் பார்த்தவர் பலனறிய மாட்டாரப்பா, காருமே கைபாகந் தன்னைவிட்டுக் - கருதாது பார்த்தவர்க்கு நரகமெய்தும, ஏருமே வுழுதாக்கால் பலனுமாகும்- இதமாகப் பண்டிதத்தைப் பாராமூடர், வேருமே யடிதொடுத்து யேறலாகும்-வீணாகப் பார்த்தாக்கா லில்லைகாணே. (32)

காணவே சூதத்தை விட்டோர் கெட்டார்—காதலாய்த் திரிந்தோர்கள் உடல்கள் கெட்டார், பூணவே பண்டிதங்கள் புடபாகங்கள்-போக்கோடே செய்யாதார் மருந்துங்கெட்டு, ஆணவே செய்யாட்டால் வுயிர்கள் போச்சு-ஆகாகா யிச்சையினால் மனதுபோச்சு, நாணவே'மனங்குண்ணி யேங்கியேங்கி-நாடுதனிலலைவார்கள் வாதிதானே. (33)

வாதிமகன் வைத்தியனும் வடிவுமாகும்-வகையறியான் பண்டிதங்கள் செய்யமாட்டான், சாதியினால் பேசியே சுணங்கன்தானும்-தர்க்கமது பேசியே தெரிந்தாப்போலே, வேதியனார்போலவே யுரவு பேசி-வேதாந்த சாஸ்திரத்தை மெத்தப்பேசி, கோதியே கிளிப்பிள்ளை போலேபேசிக் குணமாக வலைந்திடுவார் கோடிதானே. (34)

உப்புக்கட்டு.

கோடிதா மலையாம துப்பைக்கட்டிக் குணம்ாகச் சொல்வேன் மூன்னூறுதன்னில், நாடியே கைபாகம் உப்புமார்க்கம் - நலமாகக் கட்டுகிற மார்க்கங்கேளு, சாடியே கல்லுப்புப் படிதானெட்டுச் சார்வாகக் கடல்தண்ணீர் மூப்பத்திரண்டு, வாடியே யடிகனத்த சட்டிதன்னில்-வகையாக விட்டுநீ காச்சிடாயே. (35)

காச்சியே யகப்பையினல் கிண்டிக்கிண்டி-கனிவாக இதனேவடி கட்டிக்கொண்டு, வாச்சிடவே வொட்டயெரி யுப்புவெல்லாம்-வகையாக நெடியடங்கிக் கட்டிப்போகும், காச்சிடவே ஆண்பனே தான்காய்க்குங்காலம்-கனிவாகப் பெண்பனேயாங் கருகிப்பாரு, ஏச்சிடவே யுப்பினுலெல்லாமாகும் இனமாகும்நவலோகம் பழுக்கும்பாரே(36)

பழுக்குமேஉப்பினுடவர்னங்கண்டால்-பாஷாணச்செம்பதுவுங் களிம்புபோகும். இழுக்குமே நவலோகமெல்லாந்தங்கம் -ஏழைமதி போகாதே யின்னங்கேளு, நழுக்குமே காச்சினதோருப்புவாங்கி-நலமாக வுறுக்குகிற வரிசைகேளு, வழுக்குமே யுப்பதுவும் பலமுமெட்டு, வடிவாக வுண்டையாய்ப் பிடித்துக்கொள்ளே. (37)

கொள்ளவே யுண்டைமேல் கவசங்கேளு-கொடிதான கடல்நுரையும் மேனிதானும், துள்ளவே சீனமொடுயிடையாய்ச்சேர்த்து துடியாகயரைத்துநீ வுண்டைமேலே, தள்ளவே கவசமிட்டுக்காயவைத்துத்-தாஷ்டிகமாய் பத்தெருவிற் புடத்தைப்போடு, உள்ளபடியிப்படியேயைந்துதரம்போடு-உறுதியாயுப்பதுவுங் கட்டும்பாரே. ()

கட்டியதோருப்பதனை யெடுத்துக்கொண்டு -கல்வத்திலிட்டுநீ கெகிழரைத்து, முட்டியேசூதமது பலமுமொன்றில்-முடிவாகக் கவசமது கட்டிநல்ல, இட்டமுடனிதின்மேலேகவசங்கேளு-இதமாகக் கடல்நுரையையரைத்துக்கட்டிச் சட்டமுடனதின் மேல்மண் கவசங்கட்டிச் சரியாகப் புடமதுவை சாற்றக்கேளே. (39)

உப்பு வேதை.

சாற்றக்கேள் பத்தெருவிற் புடத்தைப்போடு- சமுசயங்களில்லாதேயுப்புச்சாகும், ஏற்றிடவே வுப்பென்றல் யெளிதோமக்காள் இதமாக வுப்பைவிட்டா லெல்லாம்பாழாம், போற்றிடவே சகலருக்குங் குருவுக்கீதானும் - பொருளாகக் கைபாகந் தோனுமப்பா, நாற்றிடவே பயிர்விளையும் நாத்தில்லாட்டால் - நலமாக வுலகமதுநில்லாதாமே. (40)

ஆமேதான் செம்புருக்கி நூற்றுக்கொன்று-அனேச்இடவே நவலோகம் மெல்லாம்பேமம், வாமேதானுப்புக்குங் காவிசுகப்பா வடிவாகத் தங்கமது யிறங்கும்பாரு, நாமேதான் வுப்பைவிட்டாலெல்லாம்பாழாம்-நலமாக வுப்பில்லாக் காரமெல்லாம், சாமேதான் வுப்புக்குச் சாயமேற்று-சரியாகும் வுப்பினுட தன்மையாமே (41)

தன்மையாய் வுப்புச்செந்தூரங்கேளு-தாஷ்டிகமாய்ச் சுட்டிய தோ ருப்புதன்னை, நன்மையாய்ப் பலம்பத்து ரெண்டுதூக்கி-நலமுடனே பொற்றலையின் சாற்றாலாட்டி, வன்மையாய்நால்சாமமாட்டிக்கொண்டு-வடிவாக வில்லைதட்டிக்காயப்போடு. இன்மையாய்ப்பத்தெருவிற் புடத்தைப்போட்டு-இதமாக யெடுத்திடச் செந்தூரமாமே.

செந்தூரம் நவலோகம் நூற்றுக்கொன்று-சேர்த்திடவே பத்தரைதானுணிக்கொக்கும், பந்தூரமாகவே மண்டலந்தான்-பதிவாக வுண்டிடவே தேகந்தானும், நந்தூரஞ் செவ்வலரிப் போலேயாகும் நலமாகப் பச்சைநரம்பிருக்கும்பாரு, வந்தூரும் விந்தூறும் வடிவாம்மெத்த-வகையாக யெல்லாமுஞ் சித்தியாமே. (43)

சித்தாவ தேதென்றாற் சொல்லக்கேளு - செயமாக வுப்பிலே கோடிவித்தை, முத்தியாய் வுப்பென்றால் யெளிதோமக்காள்-மோகமுறும வுப்புக்கு காரமேற்றி, நத்தியே நவலோகந் தன்னிலீய-நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும், பத்தியே வுப்பைமுந்தி கட்டிப்பாரு-பாலகனே வித்தையெல்லாஞ் சிததியாமே. (44)

## செந்தீத் தைலம்.

சித்தியாம்யின்னமொரு சேதிகேளு செப்புகிறேன் சித்தரெல்லாஞ் செப்பாதெல்லாம். புத்தியாய் கெந்தகத்தின் தைலந்தானும் புகலரியக் கெந்தகந்தான் சேருவொன்று, நத்தியே யண்டமதுஐம்பத்தொன்று-நலமாகச் சட்டிதனில் தண்ணீருற்றி, முத்தியேவித்திட்டுப் பின்புகேளு-முடிவாக வண்டமெல்லா மெடுத்துக்கொள்ளே.

எடுத்துமே யண்டத்தை யுடைத்துநீயும்-இதமாக வெண்கருவைத் தள்ளிப்போடு, அடுத்துமே மஞ்சளென்ற கருவைவாங்கு-அடவாகச் சேரொன்று கெந்தியிட்டு, பத்துமே யிதுரெண்டுங் கல்வத்திட்டு-பதிவாக யிருசாம மாட்டிநன்றாய், விடுத்துமே பெரியதொரு யடையாய்த்தட்டி-விதமாகச் செய்கின்ற நேர்மைகேளே.

கேளேநீ குப்பிக்குள் நிறையத்தானே-கெடியாக யடைத்தது நீ பின்புதானும், வாளேநீ குப்பிவாய் தன்னிமேலேதான்-வடிவாக மயிர் துருத்துப் பின்புநீதான், நாளேநீ தொட்டியைத்தா னடுவில்பொ த்தி-நயமாக குப்பியைத்தான் வைத்துநன்றாய், ஆளேநீ மண்ணி விட்டு நேராய்தானும்-அன்பாக மடுப்பேற்றி மேலேதானே. (47)

கெந்தகத் தைலப் பெருமை.

மேலேதான் புடமிட்டு யெரிக்கும்போது-மேன்மைபெற யடுப் புக்குள் பீங்கானிட்டு, காலேதான் புடமாறி யெடுத்தாயானால்-கனிவாகத் தைலமது மஞ்சள்போலாம். மாலேதான் மஞ்சளென்ற தைலந்தன்னை-மயமாக மண்டலந்தான் கொண்டாயானால், சேலே தான் குஷ்டமெல்லா மோடிப்போகுஞ்-செய்பாகக் கெந்தகத்தின் தைலந்தானே. (48)

துருசு செம்பு

தானென்ற கெந்தகத்தின் தைலத்தாலே—தாஷ்டிகமாய் நவ லோகம் பழுக்கும்வேதை, ஊனென்ற யிந்தநூல் தன்னிலேதான்—உறுதியாய்ச்சொல்லுகிறேன் செம்புவேதை, வானென்ற துருசது தான் பலந்தான்நாலு-வடிவான சட்டிதனி விட்டுக்கேளு, நானென் றதீயெரித்துச் சாமம்நாலு-நலமாகப் பார்த்திடவே வெள்ளையாமே.

வெள்ளையாம் துருசுநீர் பலந்தான்ரெண்டு-விதமாக கெந்தியது மூவரையுமாகும், சள்ளையாம் சூடனது பலமுரெண்டு - சார்வான வீரமது பலமுங்கால்தான், கொள்ளையா மிதுநாலுங் கல்வத்திட்டு—கொடிதான பழச்சாற்றிற் சாமம்நாலு, உள்ளையாந் தானரைத்து வுண்டைசெய்து-உறுதிபெறக் காயவைத்து வுண்மைகேளே. (50)

கேளப்பாவதின்மேலே கவசங்கேளு-கெடியானசுண்ணாம்பும் உப்பும்நேராய், ஆளப்பா யரைத்ததின்மேற் கவசம்பண்ணு - அதி ன்மேலே மண்ணரைத்துக் கவசம்செய்து, மாளப்பா புடமிட்டுப் பாரத்தாயானால்-மாசற்ற செந்தூர மாகும்பாரு, தேளபபா கொ ட்டுதல்போ லிந்தமார்க்கம்-தெவிட்டாது துருசினுடமார்க்கந்தானே

மார்க்கமென்ன பின்புநீ செய்யக்கேளு-மதிமயங்கிப் போகா தேபப்பாகேளு. தீர்க்கமென்ன வெடியுப்புத் திராவகத்தைச் சீர் பெறவே யிட்டுநன்றாய் வைத்துக்கொண்டு, ஏர்க்கமென்ன அர பொடியும் பலமுமொன்று-எலுமிச்சம் பழச்சாற்றால் ஊறவைத்து, கார்க்கமென்ன தெளிவிறுத்து வைத்துக்கொண்டு-கனிவாக முன் மருந்தை யறைத்திடாயே. (52)

அறைத்துமே வில்லைதட்டிக் காய்ந்தபின்பு-அகலிலிட்டு மேல கலால் மூடிக்சேளு, முறைத்துமே மூன்றெருவிற் புடத்தைப் போடு-முக்கியமா யாறவிட் டெடுத்துக்கொண்டு, குறைத்துமே குகையிலிட்டு வுருக்கித்தீரு-குணமான செம்பாருங் கூர்ந்துபாரு, வறைத்துநீ செப்பெடுத்துக் கரியில்வைத்து - வகையாக வூதிநன் ருய் வைத்துக்கொள்ளே. (53)

## இரும்புருக்கும் விதம்

கொள்ளவே யரபொடியும் பலந்தான்நாலு - கொள்கியதோர் கெந்தியது பலமும்நாலு, மள்ளவே யிதுரெண்டுங் கல்வத்திட்டு-மயனமா யிருசாம மரைத்துத்தீரு. கள்ளவே குகையிலிட்டு வுருக்குநன்ருய்-கனமான மணியாகுங் கண்டுகொள்ளு, தெள்ளவே மணியெடுத்து வைத்துக்கொண்டு-திறமாகச் செய்தொழிலைச் சொல்லக்கேளே. (54)

கேளேநீ முன்செம்பு பலமும்நாலு-கெடியாகப் பலமொன்று வுருக்கிரும்பு, தாளேநீ தங்கமது பலமுமொன்று - தாஷ்டிகமாய் மூன்றுமொன்று யுருக்கிக்கொண்டு, காளேபாழ் போகாமற் களங்க பாகும்-கவிலரிது களங்கினுட பெருமை மெத்த, காளேநீ வெள்ளியது பலந்தானென்று-சமர்த்தாகக காரீயஞ் சமமாய்க்கூட்டே (55)

கூட்டியே போட்டிவிட்டு ஊதிப்போடு-குணமாகக் கசடகற்றி தகடுதட்டி, வாட்டியே வுப்பிரண்டு செங்கல்லொன்று - வடிவாகக் கல்வத்திவிட்டரைத்து, நாட்டியே வட்டதனிற் புடத்தைப்போடு-நலமாக வெள்ளியதை மேலேவைத்து, மூட்டியே மூவைந்துபுடைத்தைப்போடு-முக்கியமா யெடுத்துப்பார் முறையதாமே. (56)

## களங்கின்வேதை

முறையாகச் சேர்க்கின்ற பாகங்கேளு - முற்றுபெற வெள்ளி தரன் நாலுமாகும், குறைபிளாக் களங்கமது வொன்றுமாகும்-குணமாக யிதமூன்று முருக்கித்தானும், உறையாகப் பார்த்திடவே பத்துமாற்று-உயர்வாக வுப்புக்கும் காவிக்கேகா, நிறையாகத் தாயை விட்ட பாவத்தாலே-நிஷ்டுர மாகுமிது வாதந்தானே. (57)

வாதமது நிலைக்கவே சொல்லக்கேளு-வடிவான தங்கமது சாகவேணும், சூதமது தங்கததிற் சேர்க்கவேணும்-சுகமான தங்கமது யெளிதிலாகும், காதமது நடந்தாலும் வழியுந்தானும்-காதலாய்த் துலையுமது கருதிப்பாரு, வேதமது படித்தாலே ஞானமாகும்-விதமாக யெல்லாமுஞ் சித்தியாமே. (58

சித்தியாந் தங்கத்தால் வேதைகோடி-செப்பரிய சூதத்தால் வேதைகோடி, புத்தியினால் வாதசித்தி யுடனேயாகும்-புகலரியதை லத்தால் வேதைகோடி, நத்திமேய கெந்தியினால் வித்தைகோடி-காடாத வாதவித்தை நளினமாகும், சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் முந்நூறு தன்னில-சகலசித்தி நிலைக்குமது தாக்கிப்பாரே. (59)

செம்பு வேதை

தாக்கிடவே யின்னமொன்று சாற்றக்கேளு சாதகமாய்ச்சொல் லுகிறேன் கையின்பாகம், வாங்கிடவே செம்பதுவுஞ் சேருமொன் று-வடிவாகத்தகடாகத் தட்டிக்கொண்டு, நோக்கிடவே கல்லுப்புச் சேருயெட்டு-நன்மையாய்ச் செங்கல்மா றுலுசேரு, ஆக்கிடவே ரெண்டுமொன்றாய் நெகிழரைத்து-அடவாக வரட்டிதனிற் பரப்பி வையே. (60)

பரப்பியே செம்பென்ற தகடுவைத்துப் - பதிவாக யெருவடுக் கிப் புடமும்போடு, கரபபியே புடமாறி யெடுத்துத்தானே-கனிவா கவெங்கலத்தின் சட்டி தன்னில், பரப்பியே தண்ணீரை நிறையவிட் டுப்-பாங்காகப் பிரட்டியெடு பண்பதாக, உரப்பியே யலசியெடு யதி ரைத்தாலும்-உண்மையாய் மண்ணில்லா தெடுத்திடாயே. (61)

எடுத்துநீ யதுவெல்லாங் காயப்போடு-இதமாகக் காய்ந்தபின்பு யின்னங்கேளு, வடுத்துமே கெந்தியென்ற தைலந்தன்னை-வடிவாக அதின்மேலே யிட்டுமேதான், கடுததுமே மூன்றுநா ளரவைத்து-கனிவாக வேயரைத்துப் பில்லைசெய்து, நடுத்துமே காயவைத்து புடத்தைப்போடு-நன்மையாய்ச் சிவந்துநிற்குஞ் செம்புதானே (62)

தானென்ற சிவந்துநின்ற செந்தூரத்தை-தாஷ்டிகமாய் நேரச கக்காரங்கூட்டி, வானென்ற யிதையரைத்துக் குகையில்வைத்து வடிவாக யுருக்கிடவே செம்புமாகும், நானென்ற செம்புதனில் நா லுக்கொன்று-வலமாகத் தங்கமது சேர்த்துருக்கி, கானென்ற தக டாகத் தட்டிக்கொண்டு—கனிவாகக் கெந்தியது முக்கால்சேரே. ()

சேர்த்துநீ வீரமது காலுங்கூட்டிச்—சிறப்பாகத் தகடுக்கு மே லும்பூசி, பார்த்துநீ புடம்போடு நொறுங்கமட்டும் - பறிவாகப்போ ட்டுடுயெடு கறுத்துப்போகும், காத்துமே மயங்காதே வெள்ளிதன் னிற்-கனிவாக நாலுக்கு வொன்றுகூட்டி, நார்த்துமே யுருக்கிப்பார் பார்த்துக்காணும்-நலமாகப் பத்தாகும் நயந்துபாரே. (64)

சேம்புச்சேந்தூர வேதை.

நயந்துபார் செந்தூரஞ் செய்யக்கேளு - நலமாகத் திராவகத் தா லரைத்தரைத்து, பயந்துமே போகாதே புடத்தைபோடு - பதிவாயிப் படிபத்து மூறையேபோடு, கயந்துமே செந்தூரம் முருக்கம்பூப்போல - காரியமாய்த் தானிருக்குஞ் செந்தூரந்தான், மூயந்துமே செந்தூரம் நூறறுக்கொன்று - மூட்டுவாய் நவலோகந் தன்னிற்கேளே. (65

கேளுமே யிருபத்தி யைந்துமாத்து-கெடியாக வர்ணமது பச்சையாகும, ஆளுமே யிதுதனேயே தணிக்கக்கேளு - அடவாகச் செப்புதனை வைத்துருக்கி, நாளுமே பாத்திடவே மாத்துத்தானும்-நலமாகத் தணியுமது தங்கமாகும், வாளுமே தங்கத்தை வைத்துக்கொண்டு-வளமாக ஜீவனத்தைப் பண்ணிடாயே. (66)

பண்ணிடவே யோகமொடு ஞானம்பாரு-பதிவாகச் சுழிமுனையில் நாட்டம்பாரு, உண்ணிடவே மண்டலத்திற் காயசித்தி - உறவான வாதமது யெண்பதுந்தான், தண்ணிடவே யோடுமது கடலேபுக்கும்-தாஷ்டிகமாய்ச் சிலேற்பனங்க ளோடிப்போகும், கண்ணிடவே கள்ளிப்பால் கறந்தாப்போல-கனிவாகச் சித்திதருங் கண்டுபாரே. (67)

கண்டுபா ரயச்செம்பைக் கண்டபோதே - கனிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், உண்டிடவே மனமதுவு மகிழ்சூலியாகும்-உறுதியிது நல்லவித்தை யுற்றுப்பாரு, கொண்டிடவே சித்தரிடங் கூடிவாழ்வீர் - குணமாக யெல்லாமுஞ் சித்திமெத்த, பண்டிடவேசித்தி யெலலாம் பணபுமாகும்-பார்ப்பவர்க்கு வெகுசுளுவு பண்புதானே.

டண்பாக யின்னமொரு சேதிகேளு - பதிவாக ஞானகற்பயோகமாகும், கண்பாக நாகரசத் தைலந்தன்னைக்-கனிவாகச் செய்திடவே யுலகத்தோர்க்கு, நண்டாக நவலோகம் பழுக்கும்வேதை நாட்டியே கைபாக வரிசைநேர்மை, உண்பாரை யுடுப்பாரைப் பார்த்துயேங்கி-உறவழிந்து போகாதே வாதமபாரே. (69)

வாதமென்றால் கொஞ்சத்திற் கிடைக்குமோசொல் - மகத்தான யோகிமுதல் ரிஷிகள் சித்தர், நீதமென்ற பஞ்சகர்த்தா ளிவர்கட்கெல்லாம் - நிறைநிறையாய்ப் பார்த்திடினும் தப்பிப்போகும், வேதமென்ற ஐந்தாம்வே தத்துக்கொக்குப்-விரைந்துமனேன் மணித்தாயார் சொல்லக்கேட்டு, பாதமென்ற பாதத்தைச் சிரசில் வைத்துப்-பரிவாக நாகரச செந்திபாரே. (70)

## நாகரச கெந்தித் தைலம்

நாகரச கெந்தியென்ற குருவைத்தானும் - நாதாக்க ளொளித்திட்ட குருவைக்கேளு, தாகமதாய்க் கைபாக வரிசைகேளு - தாஷ்டிகமாய் நாகமது பலமுமொன்று, யோகமாய் நாகத்தின் சுத்திகேளு ஒத்துமே யிலுப்ப நெய் தன்னிலப்பா, பாகமாய் பத்துவிசையுருக்கிச்சாய்க்கப் - பண்பாக வூரலற்றுக் கட்டுமபாரே. (71)

கட்டியதோர நாகத்தைக் கரண்டிவிட்டுக் - கனலிவிட்டு யுருக்கியே கருணையாகத், திட்டமுடன் ரசந்தன்னை யதிலே வாரு-தீவிரமாய் ரசத்தையுமே நாகமுண்ணும், பட்டிகமாய்த் தவளையதைப் பாம்புதானும் பதிவாக முழுங்கினது போல் முழுங்கும், அட்டியில்லை அய்யர் சொன்ன கைபாகத்தை அன்பாகச் சொல்லுகிறேன் அறிந்துகாணே. (72)

அறிந்துமே யிந்தயிடை கெந்திசேர்த்து - அப்பனே யதைவிட்டுச் சாமமூன்று, கறிந்துமே யரைத்ததனை வில்லைசெய்து - கனமான ரவிதனிலே யுலரப்போடு, பறிந்திமே யுலர்ந்தபின்பு சொல்லக்கேளு பண்பாக யெருவடிக்கிப் புடத்தைப்போடு, கறிந்துமே தயிலமது யிறங்கும்பாரு-நலமாகத் தைலத்தை யெடுத்துக் கொள்ளே.

மாற்றுயர

தயிலத்தை யெடுத்துமே சொல்லக்கெளு-தயவாக மதிதனிலே யீந்தாற்கேளு, அயிலமெல்லாங் கொடுத்தாலுந் தைலவேலை-ஆச்சரியங் கெந்தகத்தின் போக்குமெத்த, தயிலமதிற் றணிந்தபொன்னை தைலத்திற் றோய்த்து- தாஷ்டிகமாய்ப் புடம்போட்டு வுருக்கிப்பாரு, வயிலமாய் மாத்துத்தான் பத்துமாகும் வடிவாகக் கைபாகமாகச் செய்யே. (74)

## கருவங்கச் செந்தூரம்

செய்யவே யின்னமொரு களஙகுகேளு-செப்புகிறேன் உலகத்திற்சொல்லா நீதி, வையமேவ காரீயஞ் சேர்தாஜென்று - நலமாகச் சுத்தியண்ணிக் குகையிலிட்டு, மெய்யவே யுருகையிலே யிடைதான் கேளு-மேன்மைபெறக் கெவுரிதன்னை யீந்திட்டாக்கல், பையவே நொறுங்கியது தூளுமாகும்-பதிவாக அயச்சட்டி தன்னிலிட்டே. (75)

இட்டுமே கல்லுப்புச் சேர்தாஜென்று-இதமாகக் கொடுத்து வறு பயமில்லாமல், கட்டுமே யிருசாமம் வறுத்தபின்பு-கருவாகக் கற்றாழைப் பாலாலாட்டி, வட்டுமே பெரியபுடம் போட்டுத்தீரு-வடிவாகச் செந்தூர முருக்கம் பூப்போல், நட்டுமே யிருந்துவிடும் நாலத்தொன்று நலமாக வங்கசெந் தூரந்தானே. (76)

தானென்ற செந்தூரந் தன்னிலேதான்-தாஷ்டிகமாய்த் தாளக முஞ் சூகஞ்சேகு, வானென்ற புகைரோ லரைத்துக்கொண்டு - வடி வாகக் காயவைத்து வண்மையாக, நானென்ற அகலிலிட்டுப் புடத் தைப்போடு-நலமாகச் செந்தூர முருக்கம்பூப்போல், கானென்றுயி ருக்குமது செம்பு நூற்றிற்-கனிவாக வொன்றிடவே கனகமாமே. ()

கனகமாம் வங்கத்தைக் கண்டபோதே-காதலுடன் செல்வங் கள் மெத்தவுண்டு, வனகமாம் வங்கமென்ற ராஜாவாலே-வடிவான சகலகுரு வழியுமாகும், உனகமாம் வாதமெல்லா மேதிறைலே- உறு திமிகவுண்டாகும் வுற்றுப்பாரு, தனகமாம் வழலையெல்லாம் வங்கத் தாலே-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்திகாணே. (78)

## உப்பின்பெருமை.

காணவே யுப்பைமுந்திக் கட்டிப்பாரு-கனகமா யாவதற்குக் கருத்துவேணும், பூணவே யுப்பாலே யெல்லாமாச்சு-புகலறிய வுப்பு க்குக் காரமேற்றி, தோணவே யுப்பென்றால் பெரிதேயல்லால்- அரி தமுடனுப்பதுவுங் கட்டிற்றானால், பாணவே வங்கத்தை முந்திக்கட் டு-பகலிரவு தோற்றுமந்த வாட்டமாமே. (79)

வாட்டமாய்க் கைபாக மாகச்செய்தால்-வடிவாகுங் களங்காகுங் குருவுமாகும், பூட்டறியப் பூட்டெல்லாம் உப்பினாலே-புகலரிய கட் டுவகை யுப்பினாலே, தேட்டமா யுப்பைவிட்டோர் கெட்டாரப்பா - ஜெகஜால மாவதற்கு யுப்பைக்கட்டு, நாட்டவே உப்பெல்லாங் கரு மத்தாலே-நாட்டினால் சித்திக்கும் உப்புத்தானே. (80)

தானென்ற வுப்புக்குக் காரமேற்று- தாஷ்டிகமாய் வயிற்றுவலி குன்மம்போகும், மானென்ற வரிசையாய்ச் செய்து கொண்டு - வடி வான சரக்கெல்லா மிறுகிக்கட்டும், கானென்ற பூதத்தைக் கண்டுதா னுங்-கனிவாகப் பார்த்தல்லோ செய்துகொண்டு, நானென்ற வா னு வத்தைத் தள்ளிப்போடு-நலமாக வாதவித்தைக் கண்டுதேறே. (81)

கண்டுகண்டு தேறியே மனதைக்கட்டு-கனிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், பண்டுவிட்ட குருவாலே வருவதாகும்-பதிவாக வாத மென்றால் யெளிதிலாமோ, முண்டுவிட்டுக் கைபாகமாகச்செய்து முனைந்துநீ பாத்தாக்கால்தெரியுமப்பா, வண்டுபோலலையாதே நூலை ப்பாரு-மயக்காதே யறிவுகுரு வாகும்பாரே. (82)

## தங்கவுறம்

ஆகுமே தங்கவுறஞ் சொல்லக்கேளு -ஆச்சரியம் யிதுவேருமுன்னேபாரு, வாகுபெறத் தங்கவுறங் கண்டபோதே-வலுவான நோய்களெலலா மாண்டுபோகும், பாகுபெற நோயெல்லாம் தவிடுபொடியாகப் -பண்பாகச் சொல்லுகிறே,னுற்றுக்கேளு- தாஷ்டிகமா யிம்முறையை வைத்திடாயே. (83)

வைத்திடவே யின்னமொரு சேதிகேளு-வடிவாகவெள்ளியஞ் சுத்திசெய்ய, கைத்திடவே கரண்டிதனி லுருக்கிக்கொண்டு- கனிவாக வெள்ளாட்டு யமூரிதன்னில், நைத்திடவே யேழுதரமுறுக்கிச் சாய்க்க நல்லசுத்தியாயிருக்கும் நயந்துபாரு, பைத்திடவே சுத்திசெய்த யியந்தன்னைப் பதிவாகப் பலமாறு நிறுத்துக்கொள்ளே. 84.

கொள்ளவே கரண்டிதனி லுறுகும்போது - குணமாகயெண்ணெய்குத்திக் குளகுளக்க, துள்ளவே சூதமது பலமுமாறுதுடிவாகயுறுகும்போ திரதம்வாறு, விள்ளவே ரெண்டுமொன்று யுறுகிநிற்கும் விதமாக யாறவிட்டெடுத்துக்கொள்ளு, தள்ளாமற் கல்வத்திலிட்டுடைத்துத் -தாஷ்டிகமாய்ப் பிட்டாகுஞ் சார்ந்துபாரே. (85

பாருநீ கெந்தகந்தான் பலமுமாறு - பதிவாகச் சீனமது பலமுமாறு, காருநீ சாரமது பலமுமாறு—கனிவாக யிதுவைந்து நிறுத்துக்கொண்டு, தாருநீ வாய்நீரை விட்டுக்கொண்டு சாதகமாய்ச் சாமமது வரைத்துநீயும், சாருநீ காயவைத்துப் பின்புதானுஞ் சரியான கைபாக வரிசைகேளே. (86)

வரிசையா மறைப்புட்டி குப்பிதன்னில-காகாக வடைத்துநீ பின்புகேளு, உரிசையாய்க் கோணிதான் வுக்கபாக-உகந்துமேவலுவாகச் சீலசெய்து, நரிசையாய்க் காயவைத்து சட்டிபொன்று- நலமாக நடுவிலே பொதிந்துகொண்டு, கரிசையாய்க் குப்பிதனை நடுவில்விட்டுக் கனிவாக நாலுவிரலடியிற்றுனே. (87)

தானென்ற வடிதனிலே தெரியச்செய்து தாஷ்டிகமா யுள்ளே தான் மணலையிட்டு, வானென்ற குப்பிவாய் தெரியவிட்டு வடிவாக நால்சாமம் கமலம்போலே, காமென்ற தியிட்டுச் சிலாக்கையாறல் கனிவாகக் குத்தியே யெரித்துப்பாரு, நாமென்ற வடுப்பாற்றி பிரித்துத்தானும்-நலமாக வெள்ளீவ யெடுத்திடாயே. (88)

வெள்ளிவுறம்

எடுத்திடவே குப்பிதான் நொறுங்கிப்போகும்- வழைமதிபோ காமே யெடுத்துப்பாரு, அடுத்துமே தங்கம்போல நிறமுமாகும் அ ன்பாகத் தங்கவரப் பொடிபோர் காணும், நடுத்தமீ சீனத்தைத்தள் ளிமைந்தா-சரக்குந்தான் நாலுமீ சேர்த்தரைத்து. விடுத்தமீ முன் போலேயெரித்துப்பார்த்தால் விதமாக வெள்ளியரப்பொடிபோலாமே

தாதுவுறு லேகியம்

ஆமேதான் தாதுவுட குணதனைக்கேளு- அன்பாகச் சாதிக்கா ய்லேகியத்தை, வாமேதான் சாதிக்காய் பலமுமொன்று வடிவான பத்திரியுங்கிராமபுயேலம், காமேதான் கோஷ்டமொடு வால்மிளகு கனிவான கசகசா மதுரந்தானும், நாமேதான் வகைக்கொன்றுபலம் நிறுத்து-நலமாக யிளவருப்புச் செய்திடாயே. (90)

செய்திட்டுப் பின்புதான் சொல்லக்கேளு-ஜெபமாகப் பசுவின் பால் படிதானொன்றில், பைதிட்டுச் சட்டியில்விட் டடுப்பிலேற்றிப் பண்பாகத் தீயெரிப்பாய் கமலமாக, நைதிட்டு யெரித்திடவே சர்க்க ரையைவிட்டு-நலமாகப் பதமாகக் காய்ச்சிக்கொண்டு, வைதிடவே முன்மருந்தைத் தூவிக்கொண்டு வளமாகயாவின்நெய்யதனிலூற்றே

ஊற்றியே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு-உண்மையாய்ப் பா க்களவு அந்திசந்தி, நாற்றிசையு மெய்க்கவே சொல்லகேளு-நலமா கத்தங்கவுறம் பணந்தான் வீதம், சாற்றியே மண்டலந்தானுண்ணு ம்போது-சரீரத்திலுள்ளநோய் தவறுண்டேபோம், பாற்றியே மன் மதன்போற் றேகமாகும்-மயமான விந்திறுகும் வடிவதாமே. (92

ஆமேதா னனுபோகஞ் செய்யும்போது-அடவான விந்துதான் கிழ்நாடாது, தாமேதான் பெண்களெல்லாம் மயங்கிப்போவார் தய வாகத் தங்கவுற முண்டதாலே, வாமேதான் பத்தியத்தைச் சொல் லக்கேளு-வடிவாகப் பாலன்னம் புசித்துத்தீரு, காமேதான் பச்சை நாம் பிறுகிக்காணுங்-கனிவாக நோய்களெல்லா மோடிப்போமே. ()

ஒடுமே தங்கவுறங் கண்டபோதே-ஒதரிய குஷ்டமுதல் கருங் குஷ்டந்தான், நாடுமே யிதைவைத்து ஜீவனத்தை- நலமாகச்செய்தி டவே சகலசித்தி, கூடுமே கைபாக மாகச்செய்து கூடுதற்கு முன் னேதான் குணமாய்வைத்து, தேடுமீ நவலோகந் தன்னிலீயத்- திட மாக பாதமிதன்ன பத்தியமாமே. (94)

ஆமேதான் தங்கவுறந் தன்னைக்கண்டா-லடைவான நோயெல்லாமோடிப்போகும், வாமேதான் தங்கவுறம் வைத்தபின்பு-வாதாடும்வைததிபத்தில் வலுமைமெத்த, தாமேதான் பார்த்திடவே ஜீவனத்தைத் தாஷ்டிகமாய்ச் செய்திடவே பின்புநீயும், காமேதான் பஞ்சபூதத்தைக்காணு கனிவாகப் பார்த்திடவே சித்தியாமே (95)

பஞ்சலோகச் செந்தூரம்

ஆமேதான் பஞ்சபூதத்தைத்காணும்- அன்பாகக் கைவரிசையாகச்சொல்லுவேன், தாமேதான் மாத்தெல்லாம் பஞ்சபூதந் தாஷ்டிகமாயிதைவைத்து நவலோகத்திலே, காமேதான் கொடுத்திடவே மாறுமாகும்-கனிவான பூதத்தி லொன்றுதப்பில், வாமேதான் பலபலவாம்வாதங்காணும்-வடிவான வாதமது பிசகுந்தானே. (96)

தானென்ற வாதத்தை விட்டாயானால்-தாணிதனில் நாய்போல பெண்ணைச்சார்ந்து, ஊனென்ற காயமது நிற்காதப்பா-உறுதியாய்க் காயமது நிற்கவேண்டில், வானென்ற பஞ்சபூதத்தைச்செய்து வடிவாகச் செந்தூரம் வைத்துக்கொண்டு, கானென்று வுண்டிடவே காயந்தானுங் -கனிவாக யுகவரை தானிருத்துந்தானே. (97)

தங்கம்

இருத்துமே பஞ்சலோகத்தைக்கேளு - இதமாகத் தங்கமது பலமுமொன்று, கருத்துமே காய்ச்சியே தகடுதட்டிக் - கனிவாகக் கல்காவி பழச்சாறுவிட்டு, நருத்துமே யரைத்துநீ தகட்டின்மேலே நலமாகக் காய்ச்சிமுன்னே தடவியேதான், உருத்தியே யேழுதரந் தோய்த்திட்டாக்கால்-உறவாகச் சுத்தியாந் தங்கந்தானே. (98)

காரீயம்

தங்கமாந் தங்கத்தைச் சுத்திசெய்து-தாஷ்டிகமாய் விபரமினி சாற்றக்கேளு. துங்கமாங் காரீயம் பலமுமொன்று - துடியாகக் கத்தாழப் பாலால்சுத்தி, பங்கமா யேழுதர முருக்கிச் சாய்த்துப் பதிவாகச் சுத்திபண்ணி பின்புகேளு, சங்கமாய்க் கரண்டிதனில் வைத்துருக்கிச் சத்தியமாஞ் சூதமதை யதனிலூற்றே. (99)

ஊற்றியே நல்லெண்ணெய் கொஞ்சங்குத்தி, உறுதியா யாரவைத்துப் பின்புகேளு, நாற்றிசையு மெய்க்கவே யாரவிட்டு-நலமாக யெடுத்துநீ கழுவிப்போட்டு, வாற்றியே கல்வத்திலிட்டுக்கேளு-வளமான கெந்தியரைப் பலமேயிட்டு, காறறியே புகைநீரா லரைததுச் சாமங் கனிவாக வில்லைதட்டிக் காயப்போடே. (100

சேம்பு

காயவே வைத்தபின்பு பாகங்கேளு-கனிவாக யகலிவிட்டுமே லேமூடி, நாயகமாய் மண்ணரைத்துச் சீலேசெய்து-நலமாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு, மாயமே யெடுத்துநீ தூரவைத்து-மயமாகப் பின்பொன்று சொல்லக்கேளு, காயமே செப்பதுவும் பலமுமொன்று-தான்காய்ச்சித் தகடாகத் தட்டிக்கொள்ளே. (101

தட்டியே ருவியதைக் கல்வத்திட்டுத் தாஷ்டிகமாய் லிங்கமதைப்பலந்தான்கூட்டி, வட்டியே புகைநீரா ற் சாமமாட்டி-வடிவாக வில்லேதட்டிக் காயப்போடு, நட்டியே யகலிவிட்டுப் புடமுநதிரு-நலமாகச் சிறிதாகப் போட்டுத்தானும், கட்டியே யெடுத்துநீ றாரவைத்துக்-கருத்தாகப் பின்புதான் கருதக்கேளே. (102)

இரும்பு

கருதவே யிரும்பதுவும் பலமுமொன்று-கனிவாகக் கெவுரியது பலமுமொன்று. வருதவே ரெண்டும்நீ கிறுத்துக்கொண்டு-வடிவான கலவத்திலிட்டுக்கொண்டு, நருதுமே புகைநீரை விட்டுஆட்டி-நலமாகக் குகையிலிட்டு வுரிக்கினுக்கால், நருதவே யுருகியே பணிபோலாகும்-நலமான வெள்ளிமணி போலேயாமே. (103)

நாகம்

ஆமேதா னுருகினதோ ரயத்தைத்தானும்-நலமாகத் தூரவைத்துப் பின்புகேளு, காமேதா னுகமது பலந்தானொன்று-கலங்காமலினுப்பெண்ணெய் தன்னிற்றானும், நாமேதா னுருக்கியே சாண்டிதன்னில்-நலமாகச் சூதத்தைப் பாநிவிட்டு, வாமேதான் நல்லெண்ணெய் கொஞ்சங்குத்த-வளமாகப் புட்டாகு மெடுத்துக்கொள்ளே.

துருசி சேந்தூரச் சேம்பு.

எடுததுமே தாளகமும் பாதிசேர்த்து-இதமாகப் புகைநீரை விட்டரைத்து, நடுத்துமே வில்லேதட்டிக் காயப்போடு-நலமாகக் காய்ந்தபின்பு நாட்டக்கேளு, அடுத்துமே யகலிவிட்டுப் புடததைப் போடு-அடவாக வாறினபின் னெடுத்துப்பாரு, கடுத்துமே சேர்க்குகிற வரிசைகேளு-கனிவாகத் துரிசியது சேருவொன்றே. (105)

ஒன்றுகச் சீனமது சேருவொன்று-உறுதியாயண்டோடுசேருவொன்று, நன்றுகக் கல்வத்திலிட்டுத்தானும்-நலமாக வெண்கருவாலரைத்துமைபோல், வன்றுக வரைத்துநீ வில்லேதட்டி-ளையாகப் பெரியபுடம் போட்டுத்தீரு, கன்றுகக் கல்வத்திலிட்டுத்தானுங்-கனிவாக யலாத்துநீ துரிசிமேலே. (106

மேலாகக் கட்டியே பின்புகேளு-மேன்மைபெற மேற்கவசம் கட்டித்தாலும், காலான பெரியபுடம் போட்டுத்தீரு-கனிவாகவதை ப்பிரித்துப் பார்த்காயானுல், நாலான செந்தூரம் போலிருக்கும்-நல மான குகைதனிலே வைத்துருக்க, சேலாக வுருகியது நல்லசெம் பாஞ்-செககால வித்தைக்குத் திராமாப்பாரே. (107)

பஞ்சலோகக்களங்கும் வேதையும்.

பாருநீ செம்புதான் பலமுப்நாலு-பதிவாகத் தங்கமொன்று முன்னேதாக்கு, சாருநீ பின்னேதான் காரீயத்தைச் சாதகமா யுரு கையிமேல கிருசமிட்டு, ஏருநீ பின்னேதான் லிங்கம்தாக்கு இதமாக யதன்பின்னே யயதனைத்தாக்கு, வாருநீயதன்பின்னே நாகந்தாக்கு வடிவாக ஐந்துதா முருக்கிப்பாரே. (108)

உருகுமே ஐந்துந்தான் முருக்கிப்பாரு - உறுதிமிகக் குருவா கும் வெள்ளிதன்னில், நருகுமே யெட்டுக்கு ரெண்டுதாக்கு - நல மாக வூதிவிட்டெடுத்துக்கேளு பெருகுமே பெட்டேகால் மாத்துக் காணும்-பிசகாது உப்புக்குங் காவிக்கப்பா, கருதியே போகாது கை பாகத்தைக் கருவாகச் சொல்லுகிறேன் கண்டுபாரே. (109)

பாருமே யிதைவைத்து ஜீவனத்தைப் பக்குவமாய்ப்பார்த்துநீ பின்புகேளு, வாருமே வாசியோ கத்தைப்பாரு-வடிவாக ஞானவழி யெடுத்துக்காட்டும், ஏருமே வுழுதாமேல வாதயாகும்-ஏரில்லா னுகந் தடித்த கதைபோலாகும், சாருமே யொன்றைவிட்டொன்று செய் தால்-சரியில்லா தலைவார்கள் வாதிதானே (110)

தானென்ற களங்கத்தைச் செந்தூரிக்கத்-தாஷ்டிகமா யிது லகுவு முன்னேபாரு, வானென்ற களங்கமதைப் பலம்நிறுத்து-வடி வாகக் கெந்தியது நாலத்தொன்று, காரென்ற வீரமது நாலத்தொ ன்று-கனிவாகக் கல்வத்தி விதனையிட்டு, நானென்ற புகை நீரால் ஜாமமாட்டி-நலமாக வில்லைதட்டிக் காயப்போடே. (111)

போட்டுநீ யகலிலிட்டுப் புடத்தைப்போடு - பொலிவாகத் தீயா ற்றி யெடுத்துப்பாரு, காட்டுநீ செந்தூர முருக்கப்பூப்போல்-கனி வாக யிருக்குமது நவலோகத்தில், நாட்டுமே நூற்றுக்கு வொன்று தாக்கு-நலமாகப் பத்தரைதான் மாற்றுக்காணும், வாட்டுமே வுப்பு க்குங் காவிக்கேகா-வளமாக வுண்டிடவே நாட்டங்கேளே. (112)

## பஞ்சலோகச் செந்தூரத்திற்கு தீரும் வியாதி.

சாட்டபா யந்திசந்தி யுண்ணும்போது-நலபாக நீரைதிரைக ளற்றுப்போகும், வாட்டமாய் மேகமெல்லாந் தவிடுபொடியாகும்-வடிவாக வாதமது தீர்ந்துபோகும், கூட்டவே பித்தமது போகுமப்பா – கூர்ந்துபார் பலபிணியும குடிகெட்டோடும், மூட்டுமேமகோதரமு மோடிப்போகும்-முதண்டக் கூடமெல்லாம் முடிவுகாணே. (113)

தானென்ற நூல்தனிலே நாதாக்கள்சொன்னார்-தாஷ்டிகமாய் நவலோகம் வேதையாக, வாமென்ற முந்நூற்றில் வெளியாய்ச் சொன்னேன்-வடிவாக யிந்தநூல் தன்னைட்பாரு, காமென்ற கைபாகம் வெளியாய்ச்சொன்னேன்-கடினமென்று போசாதே கருதிப் பாரு, நாமென்ற வாணவத்தால் வெளியாச்சொன்னேன்-நலமாகச் சொன்னதெல்லாம் சித்தியாமே. (114)

சித்தியாம நாதாக்க ளேதுசெய்வார்-சிறப்பாகக் கைபாகமாகச் செய்வார், புத்தியாய்க் கைபாக யினமறிந்து-புனிதமாய்ச் செந்தூரஞ் செய்துகொள்வார், நத்தியே பாகமதைக் கண்டபோதே- நலமாக நூல்பர்பந் தெரியலாகும், புத்தியுடன் நூல்மறமந் தெறிந்தபோதே-பகலிரவாய் ஞானபவந்து நிலைக்கும்டாரே. (115)

## சூதக்கட்டு.

பாருநீ சூதத்தைங் கட்டில்வேதை – பகாரியப் பொன்னாகும் வேதைபாகும், சாருநீ செம்புதனைக் களிம்பெடுக்கக்-கனிவாகக் களிம்புதான் போகுமப்பா, வாருநீ கட்டாகும் மெழுகுமாகும் – வடிவாக மெல்லாமுஞ் சித்தியாகும், சேருநீசூதத்தைக் கட்டக்கேளு-சிறப்பாகக் கட்டுதற்கு வகையைக்கேளே. (116)

கேளுமே சூதமது கட்டக்கேளும் – கெடியாகத் துருசுசூதத்தைக்கொல்லும், வாளுமே லச்சைபென்று மயங்கவேண்டாம் – வடிவாகத் துருசதுவும் பலமுப்ரெண்டு, நாளுமே யயக்சர்ண்டி தன்னைத்சானே – நன்றாகத தான்வெளுக்கத தேய்த்தலம்பி, சாளுமே வெள்ளையாய்த் தேய்த்துத்தேய்ததுச் – சரியாக அலம்பியே சொல்லச்கேளே. (117)

சொல்லக்கேள் துரிசதனைப் பொடித்துக்கொண்டு - சுருக்காரைப் பழச்சாறு நிறைடவிட்டு, கலலவே சூதமது பலமுமொன்று-கனிவாகக் காண்டிதனில் விட்டுப்பின்பு, நல்லவே மூன்றுநாளாதாலும்-நலபாக வைத்துப்பின் னெடுத்துக்கொண்டு, பல்லவே கல்வத்தி லிட்டுநீயும்-மயமாகக் கழுவிலய தண்ணீர்வாரே. (118)

வார்த்துடனே நன்றாகக் கழுவிக்கொண்டு—வடிவாக அட்டை போலிருக்கும்பாரு, கார்த்துமே துணியிலிட்டுப் பிழிந்திட்டக் கால்-கனிவாகக் கட்டியா யிருக்குமப்பா, நார்த்துமே கட்டியிறு கினதைத்தானும்-நலமாக வுண்டையா யுருட்டிக்கொண்டு, பாத்துமே குளிர்ந்ததண்ணீர்க் குள்ளேயிட்டு—பரிவாக மூன்றுநாள் போட்டுவையே. (119)

சூதக்கட்டுப்பு மார்க்கம்.

போட்டுமே மூன்றுநாள் கழிந்தபின்பு - புகழாக வெடுத்துநீ சொல்லக்கேளு, நாட்டுமே கல்லுப்புப் பலமும்நாலு - நலமாகச் சல்வத்தி விட்டரைத்து, வாட்டுமே யுண்டைக்குக் கவசங்கட்டி - வடிவாகக் காயவைத்துப் பின்புகேளு, மூட்டமே கடல்நுரை தான் சேருவொன்று - முனிவாக மேனியிலேக் கால்தானுமே. (120)

ஆமேதா னிதையரைத்து வுண்டைமேலே - அடைவாகக கட்டியே காயவைத்து, நாமேதான் பத்தெருவிற் புடத்தைப்போடு - நலமாக யாறினபின் னெடுத்துநீயும், வாமேதான் கவசத்தைப் பிரித்துப்பாரு - வளமாகக் கடல்நுரையைத் தள்ளிப்போட்டு, தாமேதா னுப்புரச மெடுத்துக்கொண்டு - தயவாக வைத்திடவே நல்லதாமே. (121)

சூதக்கட்டுப்புக்கு வேதை.

நல்லதுதான் செம்புதனில் பத்துக்கொன்று நலமாகக் கொடுத்துருக்கி யெடுத்துக்கொண்டு, கலலதுதா னதையுடைத்து வெள்ளியெட்டில்-கனிவாக வொன்றுதான் சொத்துருக்க, வல்லதுதான் பார்த்திடவே மாத்துமெட்டு — ஏகாக வுப்புக்குங் காவிக்கோடா, சல்லாப மாகவே புடமிறங்குஞ்-சரியாக யிதைமுன்னே வைத்திடாயே. (122)

வைத்துநீ யிந்தவுப்பைத் தின்றுயானல்-வடிவான நரைதிரைக ளோடிப்போகும், கைத்துநீ போகாதே யுப்பைத்தின்றால் - கனிவாக யெல்லாமுஞ் சித்திமெத்த, வித்திலே விளங்கதொரு பாகபாகும் — விதபாகும் நவலோகம் பேன்மையாகும், சத்தியமாய் ரோய்களறுங் காணுதோடுஞ் - சரியான பொருளாகுஞ் சார்ந்துபாரே. (123)

பாருநீ முன்னேதா னுப்பைப்பாரு — பதிவான வுப்பதுதா னெளிதோமக்காள், ஆருமே சொல்லாக ளுப்புமார்க்கம் - அடவான கைபாகம் நேர்மைமெத்த, கோருமே கருவைத்தா னறிய வேணும்— குணமான வுப்பிலே யெல்லாமாகும், வாருமே வுப்பிலாக் கருமமெல்லாம்—வழுப்பாச்சி பாதிவுப்பு வாண்மைகேளே. ()

ஆண்மையாம் உப்படங்கிக் கட்டினுக்கால்—அறுபத்து நாலு சித்தியடலாகும், வாண்மையாம் வாதமது பேவல்கேழ்க்கும்—வடிவாக யோகமது சித்தியாகும், தாண்மையாம் வுப்பிலே யெல்லாமாச்சு—தாஷ்டிகமா யுப்பைவிட்டா லெல்லாம்போச்சு, பாண்மையா மாத்திதல்லா முப்பினுமேல்—பரக்கோடுங் கெவுனமது உப்பாலாச்சே. (125)

ஆச்சப்பா வுப்பைவிட்டால் ருசியோபோச்சு—ஆடுகிற காலுக்கு வுறுதிபோச்சு, பாச்சப்பா யப்பைவிட்டு உப்பைக்கட்டி—பாடலா மொருகோடி வித்தைகாணும், காச்சுப்பை விட்டிலுப்புஞ்சிவந்துதானால்—கைவசமா மொருகோடி வித்தையப்பா, ஆச்சிகமாய்ச் சொல்லவில்லை யுப்பின்போக்கு — சுகாயமா யெல்லாமுமறிந்திடாயே. (126)

அயச்செம்பு.

அறிந்திடவே யின்னமொரு சேதிகேளு—ஆகிபா மயச்செம்பு சொல்லக்கேளு, பறிந்திடவே அயப்பொடியும பலமோருத்து—பரிவான பழச்சாற்றி லூறவைத்து. நறிந்திடவே மூன்றுநாள் சென்றபின்பு நலமாக வதைபலமபி நாட்டக்கேளு, வறிந்திடவே துரிசிபது சேர்ந்தாமொன்று—வடிவாகக் கெந்திபது முக்காலசேரே

சேர்த்துநீ மூன்றுமொன்று யரைத்துக்கொண்டு—சிறப்பான பழச்சாறுகூடவிட்டு, பார்த்துமே யரைத்துவுண்டை பண்ணி நீயும்-பதிவாகக் காயவைத்துப் பின்புகேளு, சார்த்துநீ வுப்புடனே சுன்னமிட்டு-கனிவாக வுண்டைக்குக் கவசங்கட்டி, வார்த்துமே மண்கவச மேலேகட்டி-வளமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே. [128]

போட்டுமே யெடுத்துப்பார் கறுப்பாய் நிற்கும்-புகலாதே குகைபிலிட்டுக் காரங்கூட்டி, காட்டுநீ யுருக்கிடவே சத்துமாகும்-காரணமாய்ச் சத்தெடுத்துக் காரங்கூட்டி, வாட்டிநீ காரத்தைப் பாதிகூட்டி-வடிவாக யிருசாம மரைத்துப்பில்லை, காட்டியே காயவைத்துப் புடத்தைப்போடு-கலமாகக் குகைபிலிட் டுருக்கிடாயே.

உருக்கிடவே சத்தாகுஞ் சத்துதன்னை-உறுதியாய் வெண்காரம் பாதிசேர்த்து, நரிக்கிடவே பழச்சாறு லரைநால்சாமம்-நலமாக வில்லைதட்டிக் காயப்போடு, பெரிக்கிடவே பெரியபுடம் போட்டுத்திரு-பேசாதே குகையிலிட்டு வுருக்கிநன்றாய், நெருக்கிடவே யிப்படிக்குத் தரமுமஞ்சு-நேராக வுருக்கிடவே சத்துமாமே.

ஆமேதான் சத்துருந்தான் வெள்ளையாகும்-அடவான சத்து தன்னைப் பிரிக்கக்கேளு, நாமேதான் வீரமது ஒன்றுகூட்டி-நலமாகப் பழச்சாற்றாலரைத்துநன்றாய், சமேதான் பார்த்திடவே மஞ்சள் போலாஞ் சரியாகக் கிடத்திவிட்டுப்பெரித்துப்போடு, வாமேதான் வீரமது வுபாயேறும்-வடிவாகபடியில்நிறகும் மருந்துதானே.(131)

அயச்சேம்பு வேதை.

ம்ருந்தெடுத்துக் சாரத்தைக் கூட்டிநீயும்-வடிவாகக் குகையி லிட்டு வுருக்கித்தீரு கருந்தாதே சிகப்பாகுஞ் சிகப்புமெத்த-காசினியி லிச்செம்பு நலமாகாதும், வருந்தாதே வெள்ளிதனிற் கொடுத்தாயானால் - வடிவாக மாத்தேழு காணுங்காணும், அருந் தமேவ வுப்புக்குங் காவிக்கேகா - ஆண்மைபா யிதைவிற்று ஜீவன மேசெய்யே (132)

அபச்செப்பு களங்குவேதை.

செப்பவே அபச்செம்பு வெள்ளிதன்னில்- திறமாகக் கொடுத் திடவே மாத்துபெட்டு, பைபவே அபச்செம்பைக் கண்டபோதே-பதிவாகக் கலியெல்லாம் பறந்துபோகும், மெய்பவே அபச்செம்பு பலமுந்நாலு- மேன்மையாந் தங்கமது பலமும்நாலு, நையவே கொண்டுமொன்று யுருக்கிநல்ல - நலமாகத் தகடுதட்டி நாட்டக் கேளே. (133)

நாட்டமாய் நாலுக்கு ஒன்றுகெந்தி - நலமாக வீரமது காலதாகும், கூட்டநா யிதுவிரண்டு மரைத்துமேலே - குணமாகத் தடவியே புடத்தைப்போடு, வாட்டவே தகடதுவும் நொறுங்கிப் போகும் - வடிவாக வெள்ளிதனில் நாலுக்கொன்று, ஊட்டவே கொடுத்துருக்கு மாற்றுப்பத்து - உறுதியாய் வாதமிதில் ஒழுங்கு மாமே. (134)

ஒழுங்காகும் அபச்செம்பைக் கண்டபோதே - உறுதியாய் வாசியோ கத்தைப்பாரு, அழுங்கவே முன்னேதான் அபத்தைப் பாரு - அடவாகச் செந்தூரம் பண்ணியுண்ணு. நழுங்கவே அயத்தினுட மேனியாகும் - நலமான கருவாகும் நாடிப்பாரு வழங்கவே மனமொன்றாய்க் கூடும்பாரு - வளமான பொருளாகும் நாடிப்பாரே. (135)

நாடிப்பார் முன்னேதா னபத்தின்செம்பை-நலமாக வைத்துநீ வேலைசெய்து, கூடிப்பார் கூட்டுமுறை கண்டவாதி - குணமாக வெல்லாமுஞ் செயமுமாகும், வாட்டியே கெந்தகத்தால் வர்ண மெத்த - வடிவாகத் தாளகத்தால் வர்ணமெத்த, கூட்டியே கூட்டறிந்து கொடுத்துப்பாரு-குணமாக வெல்லாந்தான் கூர்ந்துபாரே.

கூர்ந்துமே பஞ்சபூதத்தைக்கண்டு-குறிப்பான நேர்மைகண்டு சேவைகண்டு, ஆர்ந்துமே தங்கமில்லா வாதமில்லை - அரிதரிது தங்கத்தை யறிபாவிட்டால், வார்ந்துமே கெந்தியில்லாச் செந்தூரந்தான் - வடிவுமிக வாகாது வலுச்செப்பாது, மாரந்தநீ பாயில்லாக் கப்பல்போலே - மயமாக வோடாது மார்க்கமாமே. (137)

மார்க்கமாம் போகமுத்சர் வாக்கியத்தால் - வடிவாக வாதங்கள் வருதம்பாரு, தீர்க்கமில்லாப் படுபாவி தனக்குத்தானுந் - திடமாகவொன்றுமில்லை திட்டம்பாரு. ஏர்க்கவே சுடுவாதி தனக்குமில்லை - இதமான பண்டிதமு மில்லைகண்டாய், கார்க்கவே கைபாகந் தனையுங்கண்டோர் - கருணையுள்ள புத்தியுள்ளோர் கருதுவாரே. (138)

## நாகக் கட்டு.

கருதியே நாகமது கட்டக்கேளு - கனிவாக நாகமது பலமுமெட்டு, நருதியே நாகமது சுத்திகேளு - நலமாக யிலுப்பெண்ணெய் தனிலுருக்கி, வருகியே யேழுதரஞ் சாய்த்துப்பின்பு - வடிவாகச் சுத்தியாய் வர்ணமெத்த, பருகியே தானுருக்கி வட்டாய்ச்சாய்த்து - வடிவாகப் புகைநீரை யொருதுகேளே. (139)

## புகைநீர்.

கேளுமே வெடியுப்புப் பலமுப்பத்து - கெடியான சீனமது யிருபத்தைந்து, வாளுமே பெண்டுபொன்று யிடித்துப்பின்பு-வடிவாக வாலைபென்ற சட்டியிட்டு, நாளுமே தீயெரிக்க வெள்ளைநீராம - நலமாக வெள்ளையைத்தான் தள்ளிப்போடு, தாளுமே மஞ்சளைத்தான் பிடித்துக்கொண்டு - தகுதியுள்ள சீசாவி லடைத்துக்கொள்ளே. (140)

## வெடியுப்புச் சுன்னம்.

அடைத்துமே பின்பதும் வொன்றுகேளு - அடவாக வெடியுப்புச் சுன்னங்கேளு, நடைத்துமே வெடியுப்புப் பலமும்பத்து-நலமாகப் பழம்புளியும் பலமுமைந்து, படைத்துமே பெண்டுமொன்று யிடித்துக்கொண்டு - பதிவாகப் புதுச்சட்டி தன்னிலிட்டு, முடைத்துமே தீயெரிக்கச் சுன்னமாகு - முணர்வாகச் சுன்னமது பலமுமொன்றே. (141)

ஒன்றாக நிறுத்துமே புகைநீர்தன்னில் - உறுதியாய்ப்போட்டிடவே புகைந்துபத்தும், நன்றாகப் பத்தினிமேதார் புகைநீர்தன்னில்-நலமாகச் சிவந்துசல மாகும்பாரு, கன்றாத யிச்சலத்தில் வீரம்போட்டு-கனிவாகப் பார்த்திடவே காரம்ரொம்ப, பன்றாகப் பிங்கானி லிறுத்துக்கொண்டு-பலமாக முன்னூகந் தன்னிலதானே.

தானென்ற நாகத்தை யுருக்கிச்சாய்க்க-தாஷ்டிகமாய்ப் புகை யடக்கிக் கட்டிப்போகும், வாமென்ற நாகத்தை வில்லைவார்த்து-வடிவாக வதின்மேலே கவசங்கேளு, கோமென்ற வளகிலுப்பை யரைத்துக்கட்டி-குணமாகக்காயவைத்துப் பின்புகேளு, நாமென்ற மண்சிலை வலுவாய்ச்செய்து-நாடியே பெரியபுடம் போட்டிடாயே.

போட்டுநீ யெடுத்துப்பார் தந்தம்போலே-பொலிவாகக் கண்டங்கி கிற்தம்பாரு, காட்டுமே நல்லகட்டு முழுக்கட்டப்பா-நாடியே கட்டெல்லா முப்பினுலே, நாட்டுமே உப்பைவிட்டால் வர்ணம்போச்சு-நலமாக வுப்பைமுந்திக் கட்டிப்பாரு, மூட்டுமே உப்பிலாக் கட்டுயெல்லாம்-முதலாகப் பார்த்திடவே சித்தியாமே.

நாகக்களங்குவேதை.

சித்தியாம் நாகத்தை யுருக்கிக்கொண்டு-சிறப்பாகத் தங்கமது யிடையே சேர்த்து, புத்தியா யுருக்கியே தகடுகட்டிப்-போக்கோடே யிரதமது யிடையேசேர்த்து, நத்தியே யரைத்திடவேசூதந்தானும்-நலமாக மயினம்போ லாகும்பாரு, பத்தியா யிருசாம மாட்டிப் பின்பு-பதிவாகக் காயவைத்துப் பின்புகேளே. (145)

கேளுநீ கிடத்திவிட்டு மேலேமூடிக்-கெட்டியாய்ச் சிலைமண் வலுக்கச்செய்து, ஆளுநீ வாலையெரு வடுப்பிலிட்டு- அடவாக யிருசாமமெரித்துப்பாரு, நாளுமே செந்தூர முருக்கம்பூப்போல்-நலமாக யிருந்துவிடுஞ் செந்தூரந்தான், பாளுமே போகாது செந்தூரந்தான்-பதிவாக நவலோகம் நூற்றுக்கொன்றே [146]

ஒன்றாக நூற்றுக்கு வொன்றுதானே-ஒழுங்காக விட்டிடவே மாத்துப்பத்து, நன்றாக உப்புடனே யிரங்கிப்போகும-நாட்டிலே செந்தூரங் கிட்டாதப்பா, வன்றாகச் செந்தூரங் குன்றியுண்ண-வடிவாக வாதமெண் பதுதானப்பா, கன்றாகப் பித்தமது யெல்லாம்போகுங்-கனிவாகச் சித்திதருங் கணக்குமாமே. (147)

நாகச்செந்தூரத்தால் தீரும்வியாதி.

ஆமேதான் மேகோகமும் மாலைபோகும்-அடைவான காயமது கல்தானுகும், நாமேதான் பவுத்திரங்க ளண்டவாதம்-நலமாக விரைவாதமெல்லாம்போகும், பாமேதான் குடல்வாதம் நீர்கள்போகும்-பதிவாகப் பயித்தியமு மயக்கம்போகும், தாமேதான் பவுத்திரங்கள் காமாலைபோகும் சாகூபா பிவைமெல்லாஞ் சித்தியாமே. (148)

சித்தியாங் காமாலை பித்தவெட்டை-தீராத சூலைபதி னெட்டும்போகும், புத்தியாய்ப் பொல்லாத நோய்களெல்லாம்-புகலரிய புண்புரைகள் லிங்கப்புத்தும், சத்தியே மதுமேகம் ஆம்பல்கட்டி-நலமான நீர்க்கட்டு நாடாதோடும், சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் கைபாகத்தைத்-தாஷ்டிகமாயப் பார்த்திடவே தருணமாமே. (149)

தருணமாம் ரசவாதம் யோகவாதப்-தாஷ்டிகமாய்ப் பார்த்தறிந்தால் தன்மையாகும், வருணமாம் நூலறிந்தால் வாதமாச்சு-வடிவாக யறியாட்டால் வாதம்போச்சு, கருணமாய் ஞானமெல்லா மேதாலாச்சு-கருத்தறிந்த பெரியோரைக் கண்டாரு, வருணமாய் நம்பியே பார்த்தாயானால்-வடிவாகுஞ் சித்திதரும வண்மை தானே. (150)

நீலகண்ட செந்தூரம்.

தானென்ற நீலகண்ட செந்தூரத்தைத்-தாஷ்டிகமாய்ச் சொல்லுகிறேன் யிரக்கமாக, வானென்ற நவலோக மெல்லாமேமம்-வடிவாக யறிந்தவனே சித்தயோகி, நானென்ற யாணவத்தை விட்டோன் வாதிநலமாக நூலறிந்தோன் நல்லசித்தன். கோனென்ற குருவறிந்தோன் ஞானியாவான்-குறிப்பாக யறியாதான் குணமில்லானே. (151)

குணமாக நீலகண்ட வாலைதன்னைக்-கெர்டிதாகச் சொல்லுகிறேன் கூர்ந்துகேளு, மணமாகக் கைபாக வரிசைகேளு, மார்க்கமாய்ச் சொலலுகிறேன் பாரின்மீது வணமாக வுப்பாலேயெல்லாமாச்சு-வாகாக வுப்பையிட்டா ருலுத்தமான்பர், கணமாக முப்பூவைமிந்தப்போக்கு-காதலா யறிந்தவனே வாதியென்னே. (152)

திராவகம்.

வாதியாஞ் சொல்லுகிறேனுற்றுக்கேளு-வடிவான வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல், நீதியாம் பலம்பத்து நிறுத்துக்கொண்டு-நேரான சீனமது யிருபத்தைந்து. சோதியாம் ரெண்டுமொன்று யிடித்துக்கொண்டு-ருணமாக வாலையென்ற சட்டியிலிட்டு, நீதியா யெரித்திடவே வெள்ளைநீரை-நேராகத் தள்ளியே பின்னீர்வாங்கே. (153)

ரசபர்பம்.

வாங்கியே மஞ்சள்நிறம் குருகுமக்காள்-வடிவான மஞ்சளென்ற நீருதன்னை, தாங்கியே பிடித்துநீ வைத்துக்கொண்டு-தாஷ்டிகமாய் வாலைரசஞ் சேருமொன்று, பாங்கியே கல்வத்தி லிட்டுநீயும் பதிவாகப் புகைநீரை யதிலேவாரு, தூங்கியே திரியாதே ரவியில் வைத்தால்-துட்புறவாய்ப் பூத்திருக்கும் நேர்மைதானே. (154)

தானென்ற பூவெடுத்து வைத்துக்கொண்டு-தாஷ்டிகமாய் சூதத்திற் புகைநீர்குத்தி, வானென்று வைத்திடவே பூத்திருக்கும்-வடிவாக யிப்படிக்கு யெல்லாப்பூவைக்,கானென்று யெடுத்துடனே வைத்துக்கொண்டு-கனிவாகப் பாகமாய்க் கண்டுபாரு, தேனென்ற சிவகாமி சொல்லக்கேட்டுத் - திடமாக முப்பூவைச் சொல்வேன் பாரே. (155)

திருசுநீறு

பாருநீ துருசதுவுஞ் சேர்தாஞென்று-பதிவாக வதைப்பொடித்துச் சட்டிலிட்டு, காருமே தீயெரிக்கச் சாமம்நாலு-கனிவாகக் கொக்குநிறம் போலேயாகும், சாருமே யதையெடுத்துக் தூரவைத்துச்-சரியாக யரபொடிதான் சேர்தாஞென்று, வாருமே கல்வத்தி லிட்டுக்கேளு வடிவான வீரபது பாதிசேரே. (156)

சேர்த்துநீ புகைநீரால் மெகிழவாட்டிச்- செம்மையுடன் வில்லைதட்டிக் காயப்போட்டு, பார்க்துநீ யகலிலிட்டுப் புடத்தைப்போடு-பதிவாகத் தீயாற்றி யெடுத்துப்பாரு வார்க்துநீ சிவந்திருக்கும் முருக்கம்பூப்போல்-வடிவாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு சார்த்துவேன் பூத்திருக்குஞ் சூதந்தானுஞ் சரியாகச் சேர்த்து நீ துருசுநீறே. (157)

நீருக மூன்றுமொன்று யிடையேசேர்த்து - ரோகப் புகைநீரை விட்டுஆட்டி, ஆருக யரைசதுப்பார் சிவந்துநிற்கும்-அடைவாகப் பசுக்காது முருக்கம்பூவாம், காருக யிருசாம மரைத்துநன்ருய்-கனிவாக வில்லைதட்டிக் காயப்போடு, நன்ருகக் காய்ந்தபின்பு கிடத்திலிட்டு-நலமாக மேல்மூடிச் சீலைசெய்யே. (158)

சீலைசெய்து காயவைத்துச் சொல்லக்கேளு - செயமாகச் சட்டிதான் பெரிதாய்வாங்கி ஆலையாம் நடுவிலே பொதிந்துதானே அடவாகக் கிடமதுவை யிட்டுவுள்ளே, வாலையா யுள்ளேதான் மணலையிட்டு-வடிவாகத் தீயெரிப்பாய்ச் சாமம்பத்து, காலையா யெரியிட்டுப் பிரித்துப்பார்த்தால்-கண்கொள்ளாச் செந்தூர மாகுந்தானே. (159)

தானுகக் கொஞ்சமது வுயரயேறித்-தனியாகயிருந்திடுமே சார்ந்துபாரு, வானுக யதைவழித்து அடியில்நிற்கும்-வடிவான செந்தூரந் தன்னைச்சேர்த்து, நானுகப் புகைநீரை விட்டுஆட்டி-நலமாக முன்போலே வில்லைதட்டி, தேனுக ரவிதனிலே காயவைத்துத்-திடமாக முன்போலே கிடத்திலிட்டே. (160)

இட்டுமே தீயெரிப்பாய் பத்துச்சாமம்- இதமாக வாறியபின் னெடுத்திடாய்நீ, கட்டுநீ பார்த்தாலே கனங்கொள்ளாது-கனி வான செந்தூர முருக்கன்பூவாம், பட்டுநீ கைபாகமிந்தப்போக்கு- பதிவாக விதியாளிக் கெய்துமப்பா, நட்டிநீ வைத்தாலே யிந்தப் போக்கு-நலமாக விளையுமது நாடிப்பாரே (161)

நாடியே வயிரவர்க்குப் பூசைசெய்து - நல்மாகச் செந்தூரந் தனையெடுத்து. கூடியே கும்பிதனில் தைலச்செம்பு - கூறினேன் முந்நூற்றுக் கொன்றுதாக்கு, வாடியே மாத்தென்ன பத்துமாகும் வடிவான மகாகுண் டலங்கள்பண்ணி, தேடியே யிதைக்காணப் போற்றுமாண்பர் - செகத்திலே கிடையாது செந்தூரந்தானே.

நீலகண்ட செந்தூர வேதை.

தானென்ற செந்தூரம் நவலோகத்தில் - தாஷ்டிகமாய்ப் பார் த்திடவே மாத்துப்பத்து, வானெனற சாஸ்திரத்தில், நாதாக்கள் சொன்ன-மறைப்பெல்லாம் பாடிவிட்டே னுலகுதன்னில் நானெ ன்ற வாணவத்தாற் செந்தூரத்தை - நாடியே சொல்லிவிட்டேன் நல்லவர்க்காம், கோனென்ற குருவருளைப் போற்றித்தானே-குண மான சித்திதருங் கூர்ந்துபாரே. (163)

நீலகண்டசெந்தூரத்தால் தீரும் வியாதி.

பாருநீ அந்திசந்தி வெல்லந்தன்னில் - பண்பாக வுண்டிடவே மண்டலத்தில். காருநீ நரைதிரைக ளற்றுப்போகுங் - கனிவான பித்தமறுங் கண்டுபாரு, சேருநீ வர்தமது யெண்பத்துநாலுஞ் - சிறப்பாக வோடிவிடுந் திறமைமெத்த, வாருநீ பித்தத்தா லெடுத் தரோகம் - வடிவாக வோடிவிடும் வண்மைதானே. (164)

தானென்ற சிலேற்பனங்கள் தொண்ணூற்றுறுந் - தாஷ்டிக மா யோடிவிடுந் தாக்கிப்பாரு, வானென்ற 'மூலமுதல் கிராணியெ ல்லாம் - வடிவாக வோடிவிடும் வழக்கமப்பா, தேனென்ற க்ஷயத் திலெழும் வியாதியெல்லாந்—திறமாகுன் குணமாகுஞ் சிறப்புமெத்த நானென்ற விந்திறுகும் பசுமைமெத்த - நாடாது யென்வசனம் பொய்போகாதே. (165)

போகாத கர்மமெல்லாம் போகும்பாரு - புகழ்பெரிய ஞான மது மிகவுண்டாகும், வாசாகப் பெரியோரைத் தொண்டுபண்ணி- வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், ஆகாத கர்மமெல்லா மோடி ப்போகும்-ஆச்சரியந் தேகமது காந்தியாகும், தாகமாய்ச் செந் தூர முன்னேசெய்து-தயவாக வுண்டுநீ தாக்கிப்பாரே. [166]

பாருநீ சித்தரெல்லாங் கூட்டங்கூடிப் பதிவாக வழலையென்றும் பூநீரென்றும், தாருநீ சவுக்காரச் சுன்னமென்றுந் - தடைபடவே முப்பூவை மறைத்தாரப்பா, சாருநீ மறைப்பையெலா முந்நூறுதன்னில் - சாக்ஷியாய்ச் செந்தூர வடிவுசொன்னேன், காருநீ யிந்நூலை யாராய்ந்துபார்த்து-கருத்துரவே பார்த்தாக்கால் சித்தியாமே. [167]

சித்திபெற வேண்டுமென்றாற் செந்தூரம் பண்ணு-செப்பரிய சூதத்தைப் பூர்க்கப்பண்ணு, முத்தியாய் அயத்தைநீ செந்தூரித்து முடிவாகச் சேர்த்தாக்கால் செந்தூரமாகும், பத்தியாய் நவலோக மெட்டுக்கோடும் - பகலிரவாய் ஞானவழி யெடுத்துக்கூறு, நத்தியே திரிந்துநீ சாஸ்திரத்தை-நலமாகப் பார்த்தாக்கால் சித்தனுமே.

சித்தார யாவதற்கு முறைமைகேளு - சித்ததிலே புத்தியால் முப்புப்பாரு, நத்தியே மோக்ஷத்துக் கிடமேபாரு-நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும், வித்திலே விளைந்தாப்போல் ஞானமாகும்-வேதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டுமொன்று, சத்தியமாய்ச் சொல்லி விட்டேன் செந்தூரத்தைச் சரியாக வைத்துநீ சார்வுபாரே [169]

உபரிபாண்டுச் சுன்னம்.

சார்வாக உபரிபாண்டுச் சுன்னங்கேளு-சமுசயங்க ளெண்ணாதே சார்ந்துபாரு. பார்வாகக் கடலினுரை சேர்தானென்று பதிவாகச் சுத்திமுறை பண்புகேளு, மார்வாகச் சொல்லுகிறேன சுண்ணும்பாரும் வகையாக வுவர்மண்ணைக் கரைத்துக்கொண்டு, தார்வாகத் தண்ணீரை விட்டுத்தானே தகுதியாய்க் கடல்நுரையைப் போட்டிடாயே. [170]

போட்டுநீ குமுறயெரி வொட்டக்காய்ச்சிப்-புகழாக யதையலம்பிக் கல்வத்திட்டு, கூட்டியே கல்லுப்பு யிடையேசேர்த்து-குணமாக வரைத்துமே பொடியதாக்கி, மூட்டியே யடுப்பிலிட்டுத் தீயைமூட்டி-முனையாக நாயுருவிக் கொழுந்தினாலே, நாட்டிநீ விருசாமம் வறுத்தாயானால் நலமாகச் சுன்னமது வாகும்பாரே. [171]

உபரிபாண்டு சுன்னச்செயநீர்.

ஆகுமே கல்லுப்புச் சுன்னந்தானும் அடைவாகக் கடுஞ்சுன்னமாகும்பாரு, வாகுமே கல்லுப்புக் கொடியசுன்னம் வடிவாக யிச்சுன்னஞ் காலன்காலன், பாகுபெறச் சுன்னத்துக் கிதுவேயாதி பதிவாகச் சுன்னமிடை சாரஞ்சேர்த்து, சாகுமே யிருசாம மரைத்த பின்பு சாக்ஷியா யடையிடித்து வைத்திடாயே. [172]

வைத்துமே புடம்போட்டு யெடுத்துப்பாரு வடிவாகப் பனியில்வைக்கச் செயநீராகும், கைத்துமே செயநீரை யிறுத்துக்கொண்டு கனிவாகப் பூரமொடு பச்சைரெண்டும், பைந்துநீ பலம் ரெண்டு நிறுத்துக்கொண்டு பதிவாகச் செயநீரில் அரைத்துவில்லே, மைத்துமோ ரவியிலே காயப்போடு மயமாக அஞ்சன்னக்குகையிலிட்டே. (173)

இட்டுநீ மூடியே புடத்தைப்போடு-இதமாக ஆறவிட்டுப் புடத்தைபோடு, கட்டுமே கடுஞ்சுன்னம் பூரச்சுன்னம்-கனிவாக யிச்சுன்னங் காலர்க்கொக்கும், பட்டுநீ சாரத்தை பிடைபேசேர்ந்து-பதிவாக வைததிடவே பனிபிற்றானும், கட்டுமே பலபடினச்செயநீராகும்-நலமாக யிந்நீரில் வீரம்போடே. (174

துரிசுச்சுன்னம்.

போட்டுமே பார்த்திடவே சிவந்துநீர ம்-புகலவே யிந்நீரிற் துரிசிதோய்த்து, நாட்டவே யெட்டுநாள் சீயிற்போடு- நலமாகக் கொக்கிறகு போலேயாகும, வாட்டுமே பத்தெருவிற் புடத்தைப் போடு-வடிவாகக் கடுஞ்சுன்னந் துரிசிச்சுன்னம், ஆட்டுமே யிந் நாட்டுக்காலன்போலாம்-அறியப்பா சுன்னத்தின்போக்கைக்கேளே

சாறுவரை.

போக்கான விராலியிலே யிடித்துமேதான் புகலரிய-சுன்னமது களஞ்சியிட்டு, வாக்காகப் பிசைந்திடவே சாறுதானும்-வந்துமே கொப்பளிக்குந் தண்ணீர்போலே, தாக்கான தண்ணீரை யிறுத்துக்கொண்டு-தாஷ்டிகமாய் லிங்கமது சேர்தாறென்று, பாக்காக வோட்டிவிட்டுச் சுறுக்குத்தாக்கு-பதிவாகச் சர்மமது சுருக்குப்போடே. (176)

லிங்கக்கட்டு வேதை.

போடவே லிங்கமது யுருகிக்கட்டும் - பொன்போலே கரியில் நின்று வாடும்பாரு, ஆடவே தங்கந்தா னிடைகொடுத்து - அடவாக ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு, நாடவே செம்புதனிற் பத்துக்கொன்று - நாட்டினால் தங்கமது பத்துமாத்து, ஆடவே யிதைவைத்து ஜீவனத்தை - அடவாகச் செய்துநீ யடவுபாரே. ()

கெவுரிகட்டு அயக்களங்கு.

அடவாகக் கெவுரியது பலந்தாமொன்று - அன்பாகக் காண்டிதனி லிட்டுக்கொண்டு, திடபாக விராலியிலேச் சாற்றினாலே - திறமாக யிருசாமஞ் சுருக்குப்போடு, நடமாகக் கெவுரிகட்டி மணியுமாகும் - நலமாக அரபொடிதான் பாதிசேர்த்து, விடமாகச் சேர்த்தரைத்து யுருக்கிப்போடு - வெகுசுருக்கா யுருகியது மணியுமாமே. (178)

ஆமேதான் அயப்நின்று வுருகும்போது - அடவாக நாலுக்கு ஒன்றுதங்கம், தாமேதான் தங்கமிடை நாகம்போடு – சரியாக நாகமிடை லிங்கம்போடு, காமேதான் லிங்கமிடை வீரம்போடு – கனிவாக யுருகையிமேல காரந்தாக்கு, வாமேதான் அயந்தானும் களங்குமாகு - வடிவான நவலோகம் நூறறுக்கொண்டே. (179)

ஒன்றாக யிட்டுநீ யுருக்கிப்பாரு-ஓகோகோ மாத்துத்தான் பத்துமாகும், நன்றாக ஆணிக்குப் பத்துமாகும் - நலமாக யிதைவைத்துச் செலவுசெய்து, பன்றாக வாசியோ கத்தைப்பாரு - பதைபதைத்துத் திரியாதே நூலைப்பாரு, கன்றாக வுப்பினுட சுன்னம்பாரு - கருவான வாதமாங் கண்டுபாரே. (180)

கண்டுபார் யிரும்புதனைக் கண்டபோதே-கனிவாகத் தங்கமது யிறங்கும்பாரு, உண்டுபார் யிக்களங்கைச் செந்தூரித்து - முறையாக வுண்டிடவே மோடிமெத்த, வண்டுபார் வடிவான கோபமுற்றால் - வாராது யென்னபட்டும் வாதியோரே, நண்டுபார் யிக்களங்கைச் செந்தூரித்து -நலமாக வுண்டிடவே நாடிப்பாரே. (181)

பாருநீ சரக்கைத்தான் கட்டியாடு -பதிவாக யெல்லாமும் பதங்கமாகும், காருநீ கொட்டினல் தேளேயாகும் - கனிவாகக் கொட்டாவிடிற் பிள்ளைப்பூச்சி, சேருநீ பெண்ணுடைய சினேகிதம் வேண்டாம் - சிறுவயதில் யிளைபொடு யிளைப்புண்டாகும், தாருநீ சகலமுந்தான் சித்தியில்லை- தாஷ்டிகமா யுப்பைமுந்திக் கட்டியாடே.

## அயக்களங்கு செந்தூரம்.

ஆட்டியே களங்குசெந் தூரஞ்செய்ய - அடவாகச் சொல்லுகிறே னறிந்துபாரு, கூட்டியே யிருப்பான களங்குவொன்று - குணமான கெந்தகந்தா னென்றுகூட்டி, தீட்டியே பொற்றலையின் சாற்றாலாட்டித் - திடமாக வில்லைதட்டிக் காயப்போடு, வாட்டியே யகலிவிட்டுச் சீலைசெய்து -வடுவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. (183)

போட்டுநீ தீயாற்றி யெடுத்துப்பாரு -புகலரிய செந்தூர முருக்கம்பூப்போல், நாட்டியே நவலோக மெட்டுமோடி – நலமாகப் பலபிணிக ளோடிப்போகும், வாட்டிநீ மயங்காதே நலவித்தை - வடிவாகச் செந்தூரம் அந்திசந்தி, காட்டுமே செந்தூரங் குன்றியுண்ணு - கனிவாக வயிரம்போல் மேனியாமே. (184)

ஆமேதான் செந்தூரம் பாலிலுண்ணு-அறிவழிந்துபோகாதே கைபாகத்தை, காமேதான் பாகமாய்ப் பண்ணித்தேறு - நலமாகக் கேசரியை நாடியூது, வாமேதான் ஆதிடவே வாசியோகம் - வண்மைபா யுண்டாகும் நடத்தைப்பாரு, தாமேதான் சொல்லிவிட்டேன் மூநூறுதன்னில் - தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்தியாமே.

## வெள்ளி வித்தை.

சித்தியா மின்னமொரு வெள்ளிமார்க்கம்—செப்புகிறேன இது வெகுவு முன்னைபாரு, புத்தியாய்ப் பார்த்திடவே பாகமாகும்—போக்கோடே சொல்லுகிறேன் பூண்டுகேளு, நத்தியே வெள்ளைப்பா ஷாணந்தானும் - நலமாகப் பலமொன்று நிறுத்துநீயும், சத்திபமாய் நிலைபறிந்து புத்தியாகச் - சரியாகக் கரண்டிதனில் வைத்திடாயே. (186)

வைத்திடவே விராலியிலைச் சாற்றினாலே - வகையாகச் சுருக்குகொடு ஜாமமநாலு, பைத்திடவே சுறுக்கிட்டு ஆனபின்பு - மதிவாக வண்டோடு சுன்னம்பண்ணு, கைத்திடவே யதின்மேலே யரைத்துக்கட்டி - கனிவாகக் காயவைத்து ஆனபின்பு, புத்தியாய்க் காடையென்ற புடத்தைப்போடு - புகலரிய யெல்லாமுஞ் சித்தியாமே. (187)

ஆமேதான் கட்டிநின்ற பாஷாணத்தை |- அடவாக வெள்ளி தனிலிடையேயீய நாமேதா னொறுங்கிபது தூளாய்நிற்கும்-நலமாக அந்தயிடை சூதஞ்சேர்த்து, வாமேதான் முன்னீரா லரைத்து மைபோல் - வடிவாக வில்லைகட்டிக் காயப்போடு, சாமேதான் பக்கெருவிற் புடத்தைப்போடு - சரியாக யெடுத்துப்பார் தவளமாமே. (188)

தவளமாம் வெள்ளீயம் நூற்றுக்கொன்று - தாஷ்டிகமாய்க் கொடுத்துருக்க வெள்ளீயந்தான, கவளமாய் வெள்ளியது பத்துமாத்து - கனிவாக யிதைவைத்து, ஜீவனத்தை, பவளமாய்ச் செய்துகொண்டு ஞானம்பாரு - பாககிபங்கள் மிகவாகும் பருதியுள்ளே தவளமாம் வாழ்வீர்கள் வெள்ளிவித்தைத் - தப்பாத நிச்சயமாந் தன்மைபாரே. (189)

பாரேநீ முன்னேதான் வெள்ளிவித்தை - பக்குவமாய்ச் செய்துநீ ஜீவனத்தை, காரேநீ பண்ணியிடு ராஜயோகம் - கனமாகச் செய்திடவே கருத்துநல்லாய், வேரேநீ யடிதொடுத்து யேறவேணும் - வேதாந்த நூல்களைத்தான் விரைந்துபாரு, சாரேநீ சலியாதே இன்னம்பாரு - சாக்ஷியா யெல்லாமுஞ் சித்தியாமே. (190)

ஆமேதான் வாதமது எளிதிலாமோ -அடைவாக முன்செய்த தவத்திலாகும், தாமேதான் சாஸ்திரத்தைப் பூண்டுபாரு - சரியாகச் செய்தாலே லாபமாகும், வாமேனா னறிவழிந்து போகாதேதான் - வடிவாக பெருநூலும் சித்தமெத்த, பாமேதான் விருந்திட்டுப் பகைகள்செய்தால் - பதிவாக பெல்லாமும் பகர்ந்துபாரே.

பகர்ந்துபார் வெள்ளிவித்தை செய்துகொண்டு - பதிபாசமாகவே செய்துபாரு, வகர்ந்துபார் வித்தைதா னறியாமூடர் - வழக்கமாம் வேதமுக மறிந்துகொண்டு, தகர்ந்துபார் வேதமுகந் தெரியாவாதி - தாஷ்டிகமா யெல்லாமுஞ் சேர்ந்துகண்டு, உகர்ந்துபாரெல்லாமும் பாகமெல்லாம் - உண்மையாய்ச் சித்திபா மறிந்துபாரே. (192)

தாளக்குரு

அறிந்துபார் இன்னமொரு சேதிகேளு-ஆடலா மண்டாண்ட மனைத்துமோட,பிறிந்துபார் தாளகமும் பலமுமவாங்கிப்-பேசாதே சுத்திமுறை பேசக்கேளு, நறிந்துமே தாளகத்தைச் சுண்ணந்தனில்-நலமாக வைத்துமே சுத்திசெய்து, வறிந்துநீ விராலியிலைச் சாற்றாலாட்டி-வடிவாக வில்லைசெய்து காயப்போடே. (193)

போடவே காயவைத்து அகலில்மூடிப்-போக்கோடே சொல்லுகிறோம் புடத்தைப்போடு, ஆடவே வெள்ளையாய்க் குருவுமாகும்-அன்பாகச் சேம்புதனில் நூற்றுக் கொன்று, காடவே கொடுத்துப்பார் மாத்தெட்டேகால்-நலமாக யிருக்குமது வழியுமாகும், கூடவே வழியறிந்து கூடவேணும்-குணமாகும் மனமாகுங் குருவைக்காரே. (194)

காருமே குருக்காண வேணுமென்றால்-கருவாகச் சாஸ்திரத்தை நம்பிப்பாரு,பாருமே சாஸ்திரத்தைப் பார்த்தால்சித்தி-பாராட்டாற் பலனில்லை பாருபாரு, காருமே நம்பினால் வாதமாகும் -கருவறியா மாந்தருக்கும் காணு மேசொல்சான். சாருமே வழியறிந்து துறையறிந்து சரியாகச் செய்தவனே சித்தனென்னே. (195)

சித்தனா யாவதற்கு வழியைக்கேளு - சிவவிந்தைக் கூடிய தோர்முறைமையாலே, முத்தனா யாவதற்கு வழியுஞ்சொன்னேன்-மோகமுற்ற வாதியென்றா லொன்றுமில்லை, சத்தியமாய் ஜெயநீரை வைத்துக்கொண்டு - சரியாக யெல்லாமுஞ் சூக்ஷணத்திற்கண்டு, புத்தியாய் செய்துநீ வாதந்தன்னைப் - போக்கோடே சகலசித்தி யாகும்பாரே. (196)

ஆகுமே மனக்குரங்கு செப்பொட்டாது-ஆதியாய் நின்றுமே அலேவாரப்பா, வேகமா யலேயாதே நூலேப்பாரு - வேதாந்தத் தாய்தன்னே நித்தம்பூசி, சாகுமே பெண்டீரைச் சேர்ந்திடாதே - சரியான தேகமது மிஞ்சிப்போகும், நோகுமே யிதையறிந்து வல்லோரெல்லாம் - நுண்மையா யிருந்தார்கள் குணமாய்த்தானே. ()

கெந்திநீறு.

குணமாகக் கெந்தகந்தான் பலமும்நாலு - கூத்தாடும் பச்சிலேயில் துருசியிட்டு, பணபாக யிலேச்சாறு பிழிந்துகொண்டு - பதிவாகக் கெந்தகத்தை ஜாமமாட்டி, உணவாக வில்லேதட்டி ரவியிற்போடு - உற்றுமே காய்ந்தபின்பு அகலிலிட்டு, வணக்கமாய்க் காபவைத்துப் புடமேகாடை - வழிபாகக் கெந்தகந்தா னீறுமாமே.

ஆமேதான் கெந்தகத்தி னீறுதன்னால் - ஆடலாம் நவலோக மெட்டுமோடும், தாமேதான் மாற்றென்ன பதினாறும் - நாடியே விக்கிரகங் குண்டலங்கள், வாமேதான் பண்ணியே போட்டுக்கொண்டு வடிவாக வாசியோ கத்தைப்பாரு, தாமேதான் சுழிமுனேயில நாட்டப்பாரு - தாஷ்டிகமாய்ச் சகலசித்து மாகுந்தானே. ()

சாவென்ற தங்கம் விட்டால் வர்ணம்போச்சு- தாஸ்டிகமாய்க் கெந்திவிட்டால் செநதூரம்போச்சு, கோவென்ற லிங்கம்விட்டால் வித்தைபோச்சு-கூட்டியே விந்தைவிட்டா லுயிரும்போச்சு, வாவென்ற சாஸ்திரத்தைப் படியாமூடர்-வடிவாகச் சித்தியில்லே மாண்பர்மெத்த, காவென்ற கைபாகம் விட்டாற்கேளு - கனபான வாதவித்தை யில்லேபாரே. (200)

பாரேநீ வுப்பைவிட்டால் வர்ணம்போச்சு - பதிவாக ஞானம் விட்டால் வாதம்போச்சு, காருமே அபச்செய்பை முன்னே வைத்து கனிபாகும் வாதிகளே யெல்லாம்பாரு, சேருமேஎண்ணம் விட்டா லெல்லாம்போச்சு -செம்மையா யிருந்தாலே அதீதமாச்சு, வாருமே யினத்தோடே செய்துபாரு-வடிவாக யெல்லாமும் வண்மையாமே. (201)

ஆமேதான் பொருளறியார் வாதங்காணார்-அடவாக வெள்ளி வித்தை மார்க்கந்தானும், நாமேதான் சொலவிவைத்தே னிந்தவித்தை-நாதாக்கள் சொல்லாத சொல்லேத்தானும், பாமேதா னிவ்வுலகில் ஞானயோகம்-பகலிரவாய்ப் பார்த்தவனே பரமயோகி, பூமேதான் வாதசித்தி யாகவென்றும்-புசலரியயிந்நூலேப் பேணிப்பாரே.

பேணியே சொல்லுகிறே னின்னங்கேளு-பேசாதே யொருவ ருக்கும் புறஞ்சொல்லாதே, ஆணியாம் வயித்தியத்தில் வளைந்து பாரு-அடவான சித்தியெல்லா மிதற்குள்ளாச்சு, காணியாம் வல் லோர்கள் செய்வாரப்பா-காரணமாய் விதிபதனைக் கண்டுகொண்டு, தோணிமே-லேறினவன் போலேயாகுந்-துடியான வாதத்தின் செய் கைதானே. (203)

நாகபற்பம்.

செய்கையாம் நாகபற்பச் செயலைகேளு-செயமாகப் பற்பத் தைச் செய்துபாரு, பைகையாம் நாகமது பலந்தான்பத்து- டதி வாக யிலுப்பெண்ணெய் தனிலுருக்கி, வைசையாம் வடிவாகக் கரண்டியிட்டு-வளமாக வுருக்கியே சோமனுதி, பைகையா முகத் திலே தூவிப்பாரு-பதிவாக நீறியது சுன்னமாமே. (204)

சுன்னமாம் நாகத்தில் வீரஞ்சேர்த்து - சுருக்காக யரைத்துநீ சொல்லக்கேளு; நன்மையாய் நால்ஜாமம் அரைத்துமைபோல் - நாடியே வில்லைதட்டிக் காயப்போடு, சொன்னபடி காய்ந்தவுட னின்னங்கேளு- சூக்ஷமாய்க் கவசமது கட்டிப்பின்பு, கன்னல் போற்கவசமது கட்டிப்பின்பு - கனயாகப் புடமிடவே கண்டுபாரே.

கண்டுபார் நாகமது பூத்தபூவைக் கனிவாகப் பலம்நாலு நிறுத் துக்கொண்டு, பண்டுபார் பூத்தரச மிடையேசேர்த்துப்-பதிவாகப் புகைநீரா லரைத்துச்சாமம, விண்டுபா ரரைத்துமே வில்லைதட்டி- விதமாகக் காயவைத்துப் பின்புகேளு, முண்டுபார் காயவைத்துக் கிடத்திவிட்டு - முக்கியமாய் மூடியதைச் சீலைசெய்யே. (206)

நாகபற்பவேதை.

சீலைசெய்து காயவைத்து அடுப்பிலேற்றிச் -செயமாகத் தீயெ ரிப்பாய் எட்டுச்சாமம், வாலைசெய்து யெரித்திடுவாய் செந்தூர மாகும் - வடிவான செந்தூரம் முருக்கம்பூப்போல், காலைசெய்து யிருக்குமது பின்புநீயும்-கனிவாகச் செப்புதனில் நாற்றுக்கொன்று சாலைபா மாத்தென்ன பன்னிரண்டு - சரியாக யெல்லாமுஞ் சித்தி யாமே. (207)

நாகபற்பத்தால் தீரும் வியாதி

ஆமேதான் நாகத்தின் சுன்னந்தன்னை - அடவாகச் சொல்லி விட்டே னுலகுதன்னில், வாமேதா னந்திசந்தி வெல்லந்தன்னில- வடிவாக மண்டலந்தா னுண்டாயானால், காமேதான் வாதமது எண்பத்துநாலுங்- கனிவாகப் பித்தமது நாற்பத்தைந்தும், சாமே தா னோடிவிடுஞ் சிலேத்மரோகஞ் - சரியான மகோதரமுஞ் சாடிப் போமே. (208)

சாடிப்போம் ரத்தபித்த பெரும்பாடெல்லாஞ் - சாதித்து வோடுமடா சலிப்போயில்லை, வாடிப்போம் வாந்திமுதல் ரோகமெல்லாம் - வடிவாக வோடுமடா சித்தியாகும், கூடிப்போம் ரோம்பல் வெட்டைபோகுங் குணமாகு மெல்லாமுங் கூர்ந்துபாரு, சூடிப் போஞ் சகலகலைக் கியானமெல்லாஞ் — சுகமாகும் மெல்லாமுஞ் சூக்ஷம்பாரே. (209)

பாருமே ஆப்பலெலாடு தந்தவாயு - பதிவாகப் போகுமடா பண்புள்ளோர்க்கு, காருமே நவலோலகம் ஏமமாகுங் - கனிவாக யேமத்தாற் கெர்விக்காதே, நாருமே செயலறிந்தால் பவுத்திரம் நீங்கும் - நலமாகும் பலமாகும் நாட்டப்பாரு, சாருமே யிவையாலே யெல்லாமாச்சு - சாக்ஷிபாய்க் கண்டவனேசித்தனுமே. (210)

ஆமேதான் கண்டவர்கள் சொலலுவாரோ ஆலையாதே நாய் போலே யிருந்துபாரு, காமேதா னலைந்தாலே யென்னலாபங் - கருத்துறவே பார்த்தாலே யுலகுதன்னில், சாமேதா னிம்மருந்தைப் பண்ணிக்கொண்டு - சரியாகப் பலபிணிகள் தனக்குத்தானும் நாமேதான் கொடுத்திட்டுப் பணத்தைவாங்கி - நலமாக வாதவித்தை பார்த்திடாயே. [211]

பார்த்திடவே சூதத்தை முன்னேபாரு - பதிவாக யெல்லாமுஞ் க்ஷணத்திற்சித்தி, ஏர்த்திடவே சூதமது யெளிதோவல்ல - இதமான கெவுனமது யெதிளிலாகும், கார்த்திடவே நிழல்போலே காத்திருந்தால் - கனிவாகுஞ் சகலசித்தி கருதிப்பாரு, நார்த்திடவே நெல்முளைக்கும் வாதப்போக்கு - நலமாகச் சித்திக்கும் நாடிப்பாரே. [212]

நாடியே வயித்தியத்தைப் பொய்யென்றுக்கால் - நலமில்லாப் புழுப்போலே யழிந்துபோவான், கூடியே பெண்புருடர் கூடிவாழ்ந்தால் - குணமாகச் சொல்லுவரோ உலகநீதி, பாடியதோர் பயனறிந்தால் வாதியாவான் - பதிவாகச் சொல்லிவிட்டே னறிவுள்ளோர்க்கு, வாடியே திரியாதே நூலைப்பாரு - வடிவாகக் காரசா ரத்தைப்பாரே. [213]

பாருமே சகலகலைக் கியானமெல்லாம் - பண்பாகப் பார்த்துமே கருவையுன்ன, காருமே முந்நூற்றிற் சொல்லிப்போட்டேன்- கவனமாய்க் காயசித்தி யோகசித்தி, வாருமே வாதசித்தி யாகுமப்பா - வடிவான நூலெல்லாஞ்சித்தியாகும், தீரமா யறிந்தவனே சித்தன் சித்தன் - திடமாக யெல்லாமுங் காரமாமே. [214]

காந்தச்சத்து.

ஆமேதான் யின்னமொரு கருமாணங்கேள் - அறிந்திடவே சொல்லுகிறே னன்பாய்க்கேளு, நாமேதான் காந்தமது பலமும் பத்து - நலமாக வுடைத்துமே கல்வத்திட்டு, சாமேதா னிட்டு மே துரிசிகேளு - சரியாக வெள்ளையாய் நீத்துப்போடு, பாமே தான் கெந்தியது முக்கால்போடு - பருவமாய் வெண்காரஞ் சேரு ரெண்டே. (215)

ரெண்டாக யிதுவெல்லாம் நெகிழவாட்டி - நேராக வில்லை தட்டிக் காயப்போடு, பண்டாக வுப்புடனே சுன்னங்கூட்டிப் - பதிவாக யிருசாம மரைத்துக்கொண்டு, துண்டாகக் கவசமிட்டுக் காயவைத்து - துரிதமாய்ப் பத்தெருவிற் புடத்தைப்போடு, வண்டதுபோல் கறுப்பாகும் பின்புகேளு - வடிவாக குகையிலிட்டு வுரிக்கிடாயே. (216)

உருக்கியே கல்வத்தி லிதனையிட்டு - உணர்வாகப் பாதியாய்க் காரமிட்டு, நெருக்கியே பழச்சாறு விட்டரைத்து - நேமமாய் முனபோலே வில்லைதட்டி, அருக்கியே யகலிலிட்டுப் புடத்தைப் போடு - அடவாகக் குகையிலிட்டு வுருகுகித்தீரு, பெருக்கவே வெள்ளிபோற் கண்விட்டாடும் - பிசகாமல் முன்போலே செய்தி டாயே. [217]

முன்போலே யரைத்துநீ புடத்தைப்போடு - முறையாயிப் படிமூன்று புடமேபோடு, தன்போலே யுருகியல்லோ சத்துமாகும் - தாஷ்டிகமாய்ச் சத்தெடுத்துக் கரியில்வைத்து, வன்போலே யுருக்கிடவே வெள்ளிபொன்போல் - வடிவாக ஆடிவிடுங் காந்தச் சத்து, அன்பாகக் காயசித்தி யுடனேயாகும் - ஆடலா மொரு கோடி வித்தைதானே. (218)

வித்தையை மெழுகுசட்டிக் கிண்ணிவார்த்து - விதமாகக் கிண்ணிக்குள் பாலைவிட்டு, நத்தியே யந்திசந்தி யுண்டாயானால் - நமனுமே வந்தணுகான் பாலைபோலாஞ், சித்தியாம் நரைதிரைக ளற்றுப்போகுஞ் - சிறப்பான வாதமெல்லாங் காந்தத்தாட்டு, புத்தியில் கண்டவனே வாதியாவான் - புகலரிய வாதியவன் கண்டு பாரே. (219)

காந்தக்களங்கு.

பாகுநீ காந்தசத்து வுருகும்போது - பரிவாக நாலுக்கு ஒன்றுதங்கஞ் சாருநீ தங்கமிடை நாகம்போடு - சலியாதே களங்காகுஞ் செய்புதன்னில, வாருமே நூற்றுக்கு ஒன்றுபோடு - வடிவாகச் செய்புதான் பழுத்தநேர்மை, கோருமே பத்தரையுங் காணுமாத்து - குணமாகக் குருவருளைக் கூர்ந்துபாரே. (220)

காந்தச்செந்தூரம்.

பாருமே செந்தூரஞ் செய்யக்கேளு - பதிவாகச் சத்ததுவும் பலமும்நாலு, சாருமே கெந்திபொன்று சேர்த்துக்கொண்டு-சமர்த்தாகப் பொற்றலைபின் சாற்றலாட்டி, கூருமே வில்லைதட்டிக் காயப்போடு - குணபாகக் காய்ந்தபின்பு மொழியக்கேளு, தாருமே போட்டிலிட்டு வோடுமூடித் - தயவாகப் பத்தெருவிற் புடத்தைப்போமே. (221)

போடவே தீயாற்றி யெடுத்துப்பாரு-போக்கோடே செந்தூரமுருக்கம்பூப்போல, நாடவேயிருக்குமது செந்தூரந்தான் - நலமாகச் செந்தூரம நூற்றுக்கொன்று, வாடவே கொடுத்திடவே மாத்துக்கேளு - வடிவாக யிருபத்தி யைந்துமாத்து, காடவே ஆபரணம் விக்கிரகத்தைக் - கனிவாகச் செய்திடவே சித்திபாமே.

ஆமேதான் செந்தூரங் குன்றியுண்ணு - அடவான நோயெல்லாங் கவுடுபொடியாகும், சாமேதான் நாள்பட்ட வியாதியெல்லாந்-தானுக வோடிவிடுஞ் சார்ந்துபாரு, வாமேதான் சிவனத்தைச் செய்துகொண்டு மாக்ஷிமையா யிருந்தவனே யோகசித்தன், தாமேதான் சொல்லிவிட்டேன் காந்தப்போக்கு - தப்பாமலெல்லா முந்தன்மைபாரே (223)

பாருமே செந்தூரத் தாலேயோகம்-பண்பாகச் சித்திக்கும் பரிந்துபாரு, காருமே சிவசொத்தை வறுமைபோலுண்ணு - கனிவர்கக் கும்பிபெழு நூறுதன்னில, தாருமே சொல்லிவிட்டேன் செந்தூரத்தைத்-தன்மையுடன் நீவைத்து வுண்டுதேறு, கூருமே தனையறிந்தாற குணமுமாகுங் - கொடுத்துருக்க மாத்ததுவும் பத்துமாமே. (224)

கெந்தகச்செம்பு விபரம்,

ஆமேதான் கெந்தகத்தின் செம்புசொல்வேன் - ஆச்சரியம் வெகுலெகுவு முன்னேபாரு, நாமேதான் கெந்திபது பலமும்பத்து நலமாகப் பசுவின்பால் படியுமொன்று, காமேதான் சட்டிதனிலிட்டுப்பாதி - கனிவாகமேலேதான் சீலைகட்டி, சாமேதான் கெந்தகத்தைப் பரப்பிமேலே - சரியாகச் மேற்சட்டி மூடிடாயே. (225)

மூடியே அடிச்சட்டி புதைத்துப்போடு - முளையாக மேலேதான் புடத்தைப்போடு, கூடியே தீயாறி யெடுத்துப்பாரு - குணமாக மணிமணியா யிரங்கிப்போகும், வாடியே யிப்படியே தரமேயைந்து வடிவாகப் பொன்னிறமபோல் நிற்கும்பாரு, சாடியே மணியெல்லா மெடுத்துக்கொண்டு - சரியாகச் சேர்க்குகிற தன்மைகேளே. (226)

தன்மையாங் கெந்திக்கு யிடையேநீலன் - தாஷ்டிகமாய்ச் சேர்த்து காரம்பாதி, நன்மையாய்ச் சேர்த்துநீபழச் சாறுவிட்டு - நலமாக யிருசாமந் தானரைத்து, வன்மையா யுண்டைபண்ணிக் காயவைத்து - வடிவாக அதின்மேலே கவசங்கேளு, பன்மையா யுப்பிட்டுச் சுன்னமிட்டுப் பரிவாக நன்றாய்நீ யரைத்துக் கொள்ளே. (227)

அரைத்துநீ யுண்டைக்குக் கவசங்கட்டி - அடவாகவதின் மேலே மண்ணுந்தானும், பரைத்துநீ கவசமது கட்டிப்பின்பு-பண்பாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு, நரைத்துமே யெடுத்துப்பார் கரியாய்நிற்கும - நான்கண்ட படிசொன்னேன் நன்மைமெத்த, வரைதனுமே மபங்காதே குகையிலிட்டு - மாளவே யுருக்கிடவே சத்துபாமே. (228)

சத்தாகுந் தானெடுத்துப் பார்க்கும்போது -சரியாக வெள்ளி மணி போலேயாகும், முத்தான குருவாகும் மேன்மைமெத்த - மூவுலகுக் கதிகமடா முறைகண்டோர்க்கு, சித்தான சித்தியெல்லா மிதனுலாச்சு - சிறப்பான வாதமென்ன வசியமென்ன, நத்தியே பார்த்தாலே டெல்லாஞ்சித்தி - நாமறிந்த படிசொன்னேம் நயந்துபாரே. (229)

### கெந்தகச்செம்பு காந்தச்சேர்மானம்.

நயமாகச் சொல்லுகிறே மின்னங்கேளு-நாமுரைத்தபடிபாரு கைபாகத்தை, பயமாகக் கெந்தகத்தின் சத்துவொன்று - பதிவான காந்தசத்து பலமுமொன்று, தபவாக ரெண்டுமொன்றா யுருக்கித்திரு - தடைபறவே யுருகியே சத்துமாகும், கயப்பான சத்துத்தான் கடியசத்தாம் - கனிவாக யெல்லாமுஞ் சித்திபாரே.

பாருநீ ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு - பதிவாக செம்பாகும் பருவங்கேளு, நாருமே புகைநீரை விட்டுஆட்டி - நலமாக வில்லைதட்டிக காயப்போடு, சாருமே காய்ந்தபின்பு அகலிலிட்டுச்- சார்வாகப் புடமொன்று போட்டுத்திரு, காருமே போட்டெடுத்துக் காரங்கூட்டிக் - கனிவாக யுருக்கிப்பார் செம்புமாமே. (231)

### கெந்தகச்செம்பு மகிமை.

செம்பாகுங் கெந்தகத்தின் செப்புமாகும் - செப்பரிய கெந்தகத்தின் செம்பினுலே, வம்பாக நடேசர்தான் வார்த்தசெப்பு - வடிவாக முந்நூறில வழுத்திப்போட்டேன், நப்பான பெரியோர்கள் சொல்லுமார்க்கம் - நானறிந்த படியாகுஞ் செம்பில்வேதை, பப்பரமா யாட்டிவைக்கும் வெள்ளிதன்னில் - பழுக்குமே நவலோகம் பழுத்தவாறே. (232)

வாறுகேள் கெந்தகத்தின் செம்பினாலே-வடிவான நடராஜர் வந்துதித்தார், தேறுகேள் நடேசரைத்தான் வார்க்கும்போது - திடமாக யில்லாத சேதிகேட்டு, கூறுகேள் சிற்பரைத்தாள் கோபங்கொண்டு - கொடிதாகத் தானுரைத்தார் அரனைப்போ, பாருகேள் மூலர்வந்து பரிந்துதானும்-டாகமாய் வார்த்திட்டார் பரிசுதானே. (233)

தானென்ற கெந்தகத்தின் செம்புமார்க்கந் - தாஷ்டிகமாய் முந்நூற்றில் தன்மைசொன்னேன், வானென்ற அதைமுடிக்கும் பாகஞ்சொன்னேன் - வடிவான காயசித்தி யோகஞ்சொன்னேன், கானென்ற நூல்தனிலே யில்லையில்லை-கனிவாக யிந்தநூல் கைபாகத்தை, நானென்ற ஆணவத்தாற் சொல்லிப்போட்டேன் - நாய்போலே யலையாதே நூலைப்பாரே, (234)

கெந்தகச் செம்புகளங்கு.

பாருமே கெந்தகத்தின் செம்புதன்னைப் – பதிவாகச் செந்தூரம் பண்ணக்கேளு, நாருகேள் கெந்தியுட செம்புநாலு - நலமாகத் தங்கமொன்று, நாகமொன்று, கூருகே ளிதையுருக்கக் களங்குமாகுங் குணமாக நவலோகம் நூற்றுக்கொன்று காருமே யிட்டிடவே மாத்துப்பத்து-கனிவாக உப்புக்குங் காவிக்குந்தானே ()

சானென்ற உப்புக்குங் காவிக்கோடா- தனியாகப் புடத்துக்கு யிரங்கும்பாரு, வானென்ற விதைவிற்றுச் செலவுசெய்து - வடிவாக வுண்டுடுத்தி வழியைத்தேடு, தேனென்ற சிவகாமிசொல்லக்கேட்டுச் சித்தாகப் புத்திதான் செழுமைகூர்ந்து, நானென்ற ஆணவத்தாற் சொல்லிப்போட்டேன் - நலமாதி கெந்தியுட ஆண்மைதானே. (236)

ஆண்மையாங் கெந்தகத்தின் செம்பினாலே - ஆடலாமொரு கோடி வித்தையப்பா. சாண்மைபா முலகத்தோர் செய்யமாட்டார் - தறுகுறும்பன் சொல்லுவான் பொய்யாவாறு, வாண்மையாஞ் சிவநிறைந்த யோகிக்கப்பா - வழிபோடே கைபாக மருவிக்காணும் ஏண்மையாப் போகாமல் கெந்திமார்க்கம்- இயல்பாகச் செய்துநீயிருந்திடாயே. [337]

இருந்திட்ட பஞ்சபூ தத்தைச்சொன்னேன் - இயல்பான முப்பூவி னிணக்கஞ்சொன்னேன், அருந்திட்ட பால்போலே கருத்துச்சொன்னேன் - அதன்விபர மின்னதென அன்பாய்ச சொன்னேன், தருந்திட்ட ஆத்தாளைக் கேட்டுக்கேட்டு- தைரியமாய்ச் சொல்லிவிட்டேன் நல்லபாகம், கருந்திட்ட மாகவே யுலகின்வாழ்க்கைக் - காரணமாய்ச் சொல் லுகிறேன் கருத்துத்தானே.

தானென்ற வுலகத்தில் வாதமோதான் தாஷ்டிகமாயுட்கருவும் புறக்கருவுஞ்சொன்னேன், ஊனென்ற வுட்கருவை விட்டாயானால் - உலகத்தில் மானிடராய்ப் பிறப்பார்மட்டை, வானென்ற அவசரத்திற் செய்தப்பாலபா-வடிவாக ஒன்றுந்தான் சித்திக்காது, நானென்ற ஆணவத்தாற் கெட்டோமென்று - நாய்போலே திரிந்தலைந்து மாளுவாரே. (239)

மாளாம லிருக்கவல்லோ செந்தூரஞ்சொன்னேன் -மயமாகச் செந்தூர மார்க்கந்தன்னை, தேளான பசியடங்கும் வாறுசொன்னேன் - க்ஷேணத்திலே ஞானசித்தி திறமாய்ச்சொன்னேன், கோளான குடும்பத்தில் நில்லாதென்று - கொடூரமாய் வந்திட்ட குணமுஞ்சொன்னேன், பாளான வுடலைவிட்டு வுயிருபோன - பண்பாகக் கதையாகும் பரிவதாமே. (240]

ஆமேதா னின்னமொரு சேதிகேளு - ஆச்சரியங் கெந்தியுட செம்பைச்சொன்னேன், பாமேதா னதுகொடுக்கும் பாகஞ் சொன்னேன்-பதிவாகக் களங்குசெந்தூரஞ் சொன்னேன், தாமேதான் சுன்னமது மார்க்கஞ்சொன்னேன் - தயவாக வாதமது வலுக்கச் சொன்னேன், காமேதான் சவுக்காரக் குருவைத்தானுங்-கண்டறிந்த படிசொல்வேன் கருதிப்பாரே. [241]

சவுக்காரம்.

கருதியே சித்திரைவை காசிக்குள்ளே - கனலெழுந்து பூத்து நிற்கும் மண்ணைவாரி, நருதியே நாலாறு படியெடுத்து --நலமாகப் பாணிபடி ரெட்டிப்பூக்தி, வருதியே கலக்கியதைப் பின்புகேளு - வடிவாகக் கடல்நுரைச் சுன்னந்தானும், குருதியே படிநாலு அளந்துவிட்டு-குணமாகக் கல்லுப்புப் படிதான்பெண்டே. [242]

ரெண்டாகக் தானளந்து பாண்டத்திட்டு - நேர்மையாய்க் கலக்கியே தெளிவிறுத்து, கண்டாகப் புதுச்சட்டி தன்னிலிட்டு-காரணமாய் ஒட்டயெரி குழம்புபோல, பண்டாக அகப்பையினாலெடுத்துத்தானே - பக்குவமாய்ச் சாம்பலாற் பாத்திகட்டி, வண்டாகப் பாத்திதனிற் துணியைப்போட்டு - வடிவாக வதின்மேலே குழம்பைவாரே. [243]

வார்த்துநீ மூடிவைக்கச் சாம்பல்தானும் -வடிவாகநீரிழுக்கும் வண்மையாக, கார்த்துநீ மயங்காதே யின்னங்கேளு கருவான விளாங்காய்தான் போலேபப்பா. சார்த்துநீ உண்டைபண்ணிக் காயப்போடு - தாஷ்டிகமா யெண்ணெய்க்கும் முறையைக்கேளு, வர்த்துமே வெடியுப்புச் செயநீர்தனை - இயம்புகிறேன் கைபாக வரிசைகேளே. [244]

வெடியுப்புச்செயநீர்.

கேளுநீ வெடியுப்புப் பலமுமெட்டு-கெடியாகச் சீனமொன்று சாரமொன்று, ஆளுநீ புளியெட்டுக் கூடக்கூட்டி - அடவாகக் கல்லுரலில் போட்டுத்தானே, வாளுநீ யிடித்துயதை நையத்தானே வளமாகத் தீயெரிப்பாய் சுன்னமாச்சு, சாளுமே சுன்னத்தைப் பனியில்வைக்கச் - சரியாகப் பலபலெனச் செயநீராமே. 245]

ஆமேதான் செயநீரி லுண்டைதன்னை - அடவாகத் தோய்த்திட்டு ரவியிற்போடு. வாமேதான் சவுக்காரந்தானுமாச்சு, வடிவாக யெண்ணெய்யெல்லாங் கக்கும்பாரு, நாமேதான் யெண்ணெய்யது கக்கிப்போனல்-நலமான வழலையென்ற சுன்னமாச்சு, சாமேதான் யிச்சுன்னங் கொடியகாரங்-கனிவாக யச்சுன்னங் குகையிற்ருனே.

தானேதான் அஞ்சுசுன்னக் குகையிலிட்டு-தாஷ்டிகமாய் மூடியே கோழியாக, நானேதான் புடமிட்டு யெடுத்துப்பார்த்தால்-நலமாகச் சவுக்காரச் சுன்னமாச்சு. வானேதான் சவுக்காரச் சுன்னந்தானும்-வடிவான வழலையென்றே சுன்னமாச்சு, கானென்ற வாதமது ஏவல்கேழ்க்குங்-கனிவாகச் சிறுபிள்ளை யாடுந்தானே. []

தானென்ற சவுக்காரஞ் சொன்னபாகந்-தாஷ்டிகமாய்ச் சித்தரெல்லா மென்மேற்கோபம், வானென்றசாஸ்திரத்தைப் பிடுங்கித்தானே-வடிவாகக் குகைதனிலே வைத்தாரப்பா, ஊனென்ற அதையெடுத்து வுலகத்தோர்க்கு-உறுதியாய்க் கொடுத்துவிட்டேனிந்நூல்தன்னில், கானென்ற சவுக்காரத் தாலேமைந்தா - கனிவாக வங்கமது சுன்னமாமே. [248]

வெள்ளீயச் சுன்னம்.

ஆமேதான் வெள்ளீயச் சுன்னத்தாலே-அடவாகத் துரிசியது சுன்னமாகும், காமேதான் சவுக்காரம் பலமுமொன்று-கனிவாகக் கல்வத்திலிட்டுக்தானும், தாமேதான் வாய்நீரா லரைத்துநன்றாய்-தளமாக வெள்ளீயந் தன்னிற்கூட்டி, பாமேதா னஞ்சுசுன்ன மேலேகாட்டிப்-பதிவாகக் காயவைத்துப் பண்புகேளே. [249]

துருசிச் சுன்னம்.

பண்பாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு - பதிவாகப் புடமாறி யெடுத்துப்பார்த்தால், நண்பாக வெள்ளீயஞ் சுன்னமாகும்-நலமாகச் சுன்னத்தை யெடுத்துக்கல்வம், வண்பாக யிட்டுநீ நாலத்தொன்று - வடிவாக வீரமது சேர்த்துக்கொண்டு, கண்பார்வையாகவே யுமிழ்நீர்விட்டு-கனிவாக யரைத்துநீ துரிசிமேலே. [250]

மேலாகக் கட்டியே காயப்போடு - மேன்மையாய்ப் பத்தெரு விற் புடத்தைப்போடு, காலாகப் புடமாறி யெடுத்துப்பார்த்தால் - கனிவாகத் துரிசியது சுன்னமாகும், வாலாகத் துரிசியென்ற சுன்னத்தாலே வடிவாகச் சரக்கெல்லாங் கட்டிபபோகும், பாலாகத் துரிசியென்ற சுன்னந்தானும்-பதிவாகக் களஞ்செடுத்துச் சொல்லக்கேளே. ]251]

## ரசக்கட்டு.

கேளுநீ விராவியிலே தன்னிலிட்டால்-கெடிபாகச் சாறுவருங் கண்டுகொள்ளு, வாளுமே யிட்டுநீ சூதந்தன்னை-வடிவாக யிட்டுநீ பின்புகேளு, தாளுநீ சரிபோட்டிற் குமுறக்காய்ச்சி - தாஷ்டிகமாய்ப் பாரத்திடவே கட்டிப்போகும், பாளுநீ யுருட்டியே வைத்துக்கொண்டு - பதிவாக யிறுகும்வகை பண்புகேளே, (252)

## ரசகுளிகை மகிமை.

பண்பாகக் கருவெனுமூமத்தங்காயிற்-பதிவாக வுள்வைத்துப் புடத்தைப்போடு, நண்பாகக் காடையென்ற புடத்தைப்போடு-நலமாக யிப்படியே புடமேநூறு, தண்பாகப் புடம்போட்டு, யெடுத்துப்பார்த்தால் - தவளம்போல் நிறமதுதான் வெள்ளையாகும், வண்பாகக் குளிகைதனை வாயில்போட்டால்-வடிவான கீதமது மருவுந்தானே. (253)

தானென்ற குளிகைதனை வைத்துக்கொண்டு -தாஷ்டிகமாய்க் கெவுனவெளி சுருக்கிலோடும், வானென்ற சொரூபமாங் குளிகையாகும்-வடிவாக ஆகாசந் தனிலெழும்பும், கானென்ற விந்துதான் முதுகுதனில் வைத்திட்டாக்கால - மயமாகப் பாலுதான் கறக்காவாறே. (254)

வாறுகேள் கறக்காது பாடுதானும் - வடிவாகத் தேகமது கற்றாணுதும், கூறுகே ளிப்படிக்குக் குளிகைபண்ணிக் - குணமாக ஐந்துமணிக் குளிகையாகும், தானுமே யிதைச்செய்து தாவடமாய்க்கொடுத்து - தாஷ்டிகமாய்க் கழுத்திலே போட்டுக்கொள்ளு, பாறுமே யஞ்செழுத்து மெட்டெழுத்து - பதிவாக வோதிடவே பின்பு கேளே, (255)

கேளுநீ அஷ்டகர்ம மாடலாகுங் - கெடிபாக விந்துதான் மிகவுண்டாகும், தாளுநீ ஆகாச கெவுனமோடும் - தாஷ்டிகமாய்க் கெவுனசித்தி க்ஷணத்திலாகும், வாளுநீ மோடிதம் பனங்கள் செய்யும் - வடிவான ஆக்ருஷ்ண மிகவுண்டாகும், காளுநீ மகாவேகமுண்டாமப்பா - கனிவாகச் சித்திதருங் கண்டபாரே. (256

வாலேரச பதங்கம்.

கண்டுபா ரின்னமொரு சேதிகேளு - கனிவான வைத்தியர்க்கு ஆதிபீடம், பண்டுபார் வாலேரச மெடுத்துக்கொண்டு -பதிவாக யீதைப்பதங்கஞ் சொல்வேனப்பா, குண்டுபார் வாலேரசம் பலமுமொன்று-குணமாகச் சிங்கியது பலமுமொன்று, துண்டுமே ரெண்டுமொன்றாய்ப் புகைநீர்விட்டுத்-துடியாக யிருசாம மரைத்திடாயே. ()

அரைத்துநீ வில்லைதட்டிக் காயப்போடு - அடவாகச் சிறுசட்டி ரெண்டெடுத்து, வரைத்துநீ வாயதனைத் தேச்சுப்போடு- வடிவாகயுள்ளிட்டு மேலேமூடு, அரைத்துமே சீலைமண் வலுக்கச்செய்து-அடவாகவுலையில்வைத்து வூதுமெள்ள - பரைத்துமே நன்றாக வூதிப்பின்பு-பதிவாகச் சாமமது மொன்றுதானே. (258)

தானேதான் றூற்றுக்கு மெல்லத்தானுந் தடையறவே கவசமதைப் பிரித்துப்பாரு,வானேதான் வாலேரச முபரயேறி-வடிவாகயிருக்துவிடும் வண்மையாக, கானேதா னுயரத்தா னேறிநின்ற - கனிவான பதங்கமதை வழித்துக்கொண்டு, மானேநீ வழித்தெடுத்த பதங்கம்வெள்ளை - மயமான பற்பத்தை யெடுத்துக்கொள்ளே. ()

எடுத்துமே சினத்தை யூதிநன்றாய் - இன்பமாய்ப் பதங்கமிடை சேர்த்துக்கொண்டு, அடுத்துமே வெண்கருவா லரைத்துக்கொண்டு - அடவாக் வில்லைதட்டிக் காயவைத்து, நடுத்துமே கிடத்திவிட்டு மேலேமூடி - நலமாகச் சீலைமண் வலுக்கச்செய்து, வடுத்துமே வாலையென்ற யடுபபிலிட்டு - வழியாகச் சாமமது யெரித்திடாயே. (260)

எரித்திடவே படுப்பாற்றிப் பிரித்துபபாரு-இதமாக யடியிலே நிற்குமப்பா, வரித்திடவே நெருப்புக்கு பேகிடாது-வடிவாக நெருப்புதனிற் போட்டுப்பாரு, கர்த்துமே யோடாது ஒளித்திடாது - கனிவாகச் செம்புதனிற் பத்துக்கொன்று, பரித்துநீ செம்புதனிற் கொடுத்துப்பாரு-பதிவாக யாதமென்ன எட்டுமாமே. (261)

வாலேரச பதங்கத்தால் தீரும் வியாதி.

ஆமேதானந்திசந்தி பணங்கால்வீகம் - அடவாக வுண்டுவா பிணிகள்போகும், நாமேதான் வாதமென் பத்துநாளும்-நலமான வண்டத்தின் வாதமோடு, தாமேதான் விரைவாதம் சூலைபோகுந்-தன்மையாய் முடக்கென்ற சூலைபோகும், தாமேதான் பித்தமுதல் சிலேத்மம்போகுந்-தாஷ்டிகமாய் லிங்கத்தின் புத்துப்போமே

புத்துடனேயரையாப்பு கண்டமாலை-புகலரிய பிணிகளெல்லா மாண்டுபோகும, நித்துடனே மேனியது சொர்ணமாகும்-நிலத்து டனே காயமது அழிந்திடாது, வித்துடனே வித்தாகும் விருப்ப மெத்த-விதமாக மகோதரங்கள் முப்பத்திரண்டும், நித்தியமாய்ப் போகுமது குஷ்டரோகம்-நிலையற்றே கருங்குஷ்ட மேகுந்தானே.

தானேதான் க்ஷயரோக மேகம்போகுந்-தாஷ்டிகமாய் விந்திருக்கும் வடிவாம்மேனி, வானென்ற பச்சையென்ற நரம்புதானும்-வடிவாக யிருக்குமது வண்டுபோலாம், கானென்ற ஜலரோகம் லவணமேகங் - கருத்துடனே போகுமது கண்டுபாரு, நானென்ற யாணவமு மிகவுண்டாகும் - நலமாகச் சகலகலை சித்திபாரே. 264

பாருநீ பத்தியத்தைச் சொல்லக்கேளு - பரிவான வுப்போடு நல்லெண்ணெய்யாகா, சாருநீ யுண்ணுவது சொல்லக்கேளு-சாக்ஷியாய்ப் பாலோடு வன்னமாகும், தாருநீ வன்னமது சம்பநெல்லு-தாஷ்டிகமா யரிசியல்லால் வேறுமாகா, கூருநீ யன்னத்தைச் சமைத்துவுண்ணு - கூட்டோடே நோயெல்லாம் போகும்பாரே. 265

போகுமே ரசபற்பந் தன்னைக்கண்டால்-போக்கோடே வண்டரண்ட முருகிப்போகும், வாகுமே சகலநோய் தீர்ந்துபோகும் - வடிவான யாட்டெல்லாஞ் சூதத்தாட்டு, தாகுபெறக் கட்டினுல் பொன்னுமுண்டு-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்திமெத்த, ஏகுமே யெனையாண்ட சித்தர்தாமும் - இதமாகச் சொல்லினு ரின்பமாமே.

இன்பமாம் வெடியுப்புச் செயநீர்வைத்து - இதமாக வுண்டிடவே காயஞ்சித்தி, அன்பாக யெல்லாமுஞ் சித்தியாகும் - அடவான யோகசித்தி யாகுமப்பா, நன்பாகக் கற்றுணர்ந்த பெரியோருக்கு - நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும், வன்பாக யெல்லாமுஞ் சித்திமெத்த-வகையாக யோகிக்கு மன்புமாமே. (267)

### கல்லுப்புக்கட்டு.

ஆமேதா னின்னமொன்று சொல்லக்கேளு - அடவாக வுலகத்தில் வாதிக்குத்தான், வாமேதான் கல்லுப்புங் கட்டுக்கேளு - வடிவாகச் சொல்லுகிறேன் வழக்கமாக, நாமேதான் கல்லுப்பைக் கட்டிக்கொள்ளு - நாட்டியே யெல்லாமுஞ் சித்தியாகும், பாமேதான் சித்தியெல்லா மேதாலாச்சு - பதிவாகச் சித்திதரும் பண்புமாமே. (268]

ஆமேதான் கல்லுப்புக் கரியிலாட- அடவாகச் சொல்லுகிறே னருமையாக, நாமேதான் கடல்நுரையும் பலமுமொன்று - நல மாகக் கல்லுப்புப் பலமுமெட்டு, வாமேதான் ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு - வடிவாக வதையுடைத்துக் கலசத்திட்டு தாமேதான் சுத்தகெங்கை தன்னைவிட்டுத் - தாஷ்டிகமா யொன் றுக்குப் படியைக்கேளே. (269)

படிதானே பெட்டுவிட்டுப் பாகங்கேளு-பதிவாக யடிகனத்த சட்டியிட்டு, கொடியாகக் கொதிக்கவைத்து யிறக்கவுப்பாம்-கொடி க்குள்ளே காச்சிநீ பாபக்காய்ச்சி, குடியாகச் சீலைதனி லகப்பை யாலே-குணமாக விட்டுநீ யுண்டையாக, பிடியாகக் கட்டிமே யுண் டையானல்-யிலக்கவே பண்ணியே காயப்போடே. (270]

கல்லுப்பு வேதை.

போடவே யதின்மேலே கவசங்கேளுபொருமியே கடல்நுரை தான் ஒட்டிரெட்டி, வாடவே மேற்கவசங் கட்டிக்கொள்ளு-வடிவா கக் காயவைத்து வழக்கமாக, நாடவே யிதைவைத்துச் சீவனத் தை-நலமாகச் செய்துநீ பின்புகேளு, கூடவே செம்புதா னுருக்கி த்தானுங்- குணமாக வொன்றுதான் கொடுத்துப்பாரு. 271

கொடுத்துமே பார்த்திடவே செம்புதானுங்-கொடிதானமாத் துதா னெட்டுமாகும், விடுத்துமே உப்புக்கே காவிக்கேகா-வித மான ஞான சித்தி யோகமெய்தும், தடுத்துமே யெல்லாமுஞ் சிக தியாகுங்-தனியான வடிவுள்ள யோகியாகும், கடுத்துமே யாதார வழியிற்சென்று-கனிவாக யெல்லாமுங் கனிந்துபாரே. (272)

பாருமே பதினெட்டுச் சித்தர்தாமும்-பாகமாய்க் கைபாகம் சொல்லிப்போட்டார், பாருமே யிந்நூலிற் சொல்லிவைத்தேன் பரிவாக யிதைவைத்துக் கண்டுதேரு, பாருமே யாத்தாளைப் பூசை பண்ணிப்-பண்பாக வாதமதைச் செய்துதானும், பாருமே முன் னேதான் செலவுசெய்து-பதிவாக யெல்லாமுஞ் சித்தியாமே273

கிராணி பேதிகட்ட

சித்தியா மின்னமொன்று சொல்லக்கேளு-சிறப்பாகக் கட்டு வகை தன்னைக்கேளு - புத்தியாங் கிராணிவகை யெல்லாமுந்தான் புகலாகப் போகவே சொல்லுவேன்பார், நத்தியாங் கட்டுவகை சொல்லக்கேளு-நலமாக யபினியொடு கிராம்புதானும், வித்திலே விளைந்தெழுத்த பூரணததை-விதமாக யெல்லாமுஞ் சித்தியாமே.

ஆமேதான் பேதிதான் கட்டும்வாய்மை-அடவாக யந்திசந்தி கொள்வீராகில், வாமேதான் கிராணியெல்லா மோடிப்போகும்-வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகும். தாமேதான் சித்திதர வேணு மென்றால்-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்தியாகும், பாமேதான் பாகமது யெல்லாமாச்சு-பதிவாகச் சித்திதரும் பண்புமாமே. (275]

பண்புள்ள யெனையழைத்துப் பாகஞ்சொன்னர் - பதிவாகக் கைமுறைதான் பார்த்துச் சொன்னேன், நண்புள்ளோர் மனதுவை த்துப் பார்க்கக்கேளு-நலமாகச் சைபாக மார்க்கந்தானும், உண்பாக யெனையாண்ட அகத்தியமூர்த்தி-உறுதியாய்ப்போகமது வுணமை பாரு, தண்மையா முனக்கேற்ற புததிசொன்னேன்-தாஷ்டிகமா யெல்லாமும் பண்புமாமே. [276]

பண்பாக யுலகத்தில் மாண்பர்க்காகப்-பதிவாக வாதமுதல் வைத்தியஞ்சொன்னேன், நண்பாகப் பண்டிதத்தைக் கண்டுபோ ற்றி-நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும், வண்பாக வாதமெல்லா முப்பாலாச்சு-வளமாக உப்பைமுந்தி கட்டிப்பாரு, தண்பாக யெல் லாமுஞ் சித்தியாகுந்-தாஷ்டிகமாய் நல்லபுத்தி நலமதாமே. (277)

நலமாக வாதமொடு வைத்தியந்தானும்-நலமறியான் பண்டி தத்தின் பெருமைகாணர், பிலமாக யெல்லாமுஞ் சித்திமெத்த - பிசகாமல் வாதவித்தை பேணிப்பாரு, கலமான வாதிமக னறிவா னப்பா - கருக்தழிந்து போகாதே யுலகுதன்னில், வலமாக யெல் லாமும் வந்துதோற்றும் - வடிவாக வைத்தியந்தான் சித்தியாமே.

சித்திரா வேதென்றற் சொல்லக்கேளு -செகத்திலே வாழ்வ தற்கு வாதமார்க்கம், புத்தியாய் வாதமொடு வசியமாகும் - புக லாதே யெல்லாமு மனேகவித்தை, நத்தியே யவர்களுடன் வருந் தி னுக்கால் - நலமாக யெல்லாமும் சித்தியாகும், சத்திபமாய்ப் பிழைக்கவே யுலகோர்க்காகச் - சாதகமாய்ச் சொல்லிவிட்டேனுல கிற்றனே. (279)

தானென்ற யுலகத்தோர் சுட்டுக்கெட்டு - தாஷ்டிகமா யஞ் செழுத்து மெட்டெழுத்தும், வானென்ற வுலகத்தோர் சிரிப்பா ரப்பா - வடிவான காயசித்தி யோகசித்தி, நானென்ற வாணுவத் தாற் கெட்டோமென்று - நலமாகத் திரிந்தலைந்து மாளுவார்கள், சானென்ற குருக்கிடையுங் கருக்கிடையும்வேணும் - கனிவாகப் பார்த்தறிந்தாற சித்தியாமே. [280]

ஆமேதான் பார்த்தறிய வேணுமென்றால் - அடவாக யெல்லா மூஞ் சித்தியாகும், காமேதான் சித்திதா னறிந்தபேர்கள - கனிவாக வறிவார்கள் ।யெல்லாந்தானும், நாமேதான் சித்திபெற்று லெல்லாமாச்சு - நலமாகச் சித்திதரும் நட்புமாகும், வாமேதான் சித்திக்க வேணுமென்றால் - வடிவான யோகமது மருவிப்பாரே []

மருவியே யின்னமொன்று வண்மைகேளு -வடிவான பெண்ணுடனே ஆணுஞ்சேர்த்து, உருவியே வுருவதுவுந் தரித்தாப் போலே - உண்மையா யிதைவைத்து மூன்னே செய்து, நருவியே வுடல்குறிப்புக் கண்டுதேறு - நலமாகப் பொன்னுகுங் கண்டுதேறு உருதியாய்ச் செய்தாலே யெல்லாஞ்சித்தி-ஒருவருடன் பேசாதே யுண்மைபாரே. [282)

தாளக பற்பம்

பாருநீ தாளகமும் பலமுமொன்று - பதிவாகக் கட்டியா யெடுத்துக்கொண்டு, தாருநீ வளையலுப்புப் பலமும்நாலு - தாஷ்டிகமாய்ப் பாணிவிட்டு அரைத்துநேராய். ஊருமே தாளகத்தின் மேலேகட்டி – உற்றுமே கரிதனிலே வாட்டுவாட்டு, சாருமே நன்ருகக் குமுறவாட்டு-சரியாக அனலெழும்ப வாட்டிடாயே [283]

வாட்டியே தண்ணீரில் தூக்கிப்போடு-வடிவாக வுப்பெல்லாங் கரைந்துபோகும், கூட்டியே எடுத்துப்பார் சிவந்து நிற்குங் - குணமாகச் சிவந்திருந்த செந்தூரத்தை, நீட்டியே யதையெடுத்து வைத்துக்கொண்டு - நிலையாக யிஞ்சிநீர் வுவர்மண்நேராய், மூட்டியே கலந்துநீ சட்டியிட்டு-மோகமா மாகுமினி சொல்லக்கேளே,

சொல்லவே தாளகச்செந் தூரங்கட்டிச் - சுகமாக வைத்துநீ மேலேதானும், நல்லவே மூடியே யம்மிவைத்து -நலமாக மேலேநீ சட்டிமூடி, கல்லவே சீலைமண் வலுக்கச்செய்து - கனிவாக யடுப்புதனி லேற்றிநன்றாய், மல்லவே யிருசாம மெரித்துப்பாரு-மயமாகத் தள்ளியே யெடுத்திடாயே. [285]

எடுத்திட்டு வெய்யல்தனி லெட்டுநாள்தான்- இதமாக வைத்திட்டுப் பார்க்கும்போது, அடுத்திட்டு வெள்ளையாய்ப் பூத்துறந்து - அடவாகப் பற்பமது வாகும்பாரு, வடுத்துமே பற்பத்தை யெடுத்துக்கொண்டு-வடிவாக வீரமதற் கிடையேசேர்த்து, நடுத்துமே யிருசாமங் கலவத்தாட்டி- நலமாக வில்லைபண்ணிக் காயவையே, [286]

காயவைத்துப் பின்புதான் சொல்லக்கேளு - கனிவாகக் கிட த்திவிட்டு மேலேமூடி, மாயவே சீலேசெய்து யெரித்தாயானல்-மய மாக விலேதா னடியில்நின்று, நயவாக யேருது யிருக்துமப்போ நலமாக யிருந்திடவே நன்ருப்க்கேளு, சாயவே யந்திசந்திதேனிற் கொள்ளச் - சரியாகப் பத்திபத்தைத் தாககிடாயே. [287]

தாளகப்பற்பத்தால் தீரும் வியாதி.

தாக்கிடவே யெலிகடிகள் போகும்பாரு- தாஷ்டிகமாய் வாய் வுகளும் போகும்பாரு, வாக்கிடவே ருத்திரமாம் வாய்வும்போகும்- வடிவான முபல்வலிப்பு மேகவாய்வு. பாக்கிடவே காசமுதல் பற ந்துபோகும் - பதிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், ஆக்கிடவே சோறுபா லுண்ணலாகும் - அடவாக யெல்லாமுஞ் சித்திகாணே.

காணவே மகோதரங்க லெல்லாம்போகுங் - கனிவாகச் சித்தி தருங் கருத்துள்ளோர்க்கு, ஊணவே யொருவருடன பேசவேண் டாம் - உற்றுமே மகோதரமு மோடிப்போகும், நாணவே நாலான கண்டமாலே - நாட்டிலே நில்லாது நயந்துபாரு, வாணவே வல்ல மையாந் தேகந்தானும் - வடிவான பொருளாகும் வண்மைபாரே

பாருமே சரக்கைமுந்திக் கட்டிப்பாரு -பதிவாக யுலகுதனிற் பண்டிதங்கள், காருமே முன்னேதான் பார்த்துத்தேறு-கனிவாக ரசபற்பம் லிங்கபற்பஞ், சாருமே கைபாக மாகவைததுக் - சரி யாக வுண்டிடவே நோய்ள்கபோகும், வாருமே கைபாக மாகச்செ ய்து - வடிவாகத தின்றிடவே வண்மையாமே. (290)

ஆமேதா னுலகத்திற் பண்டிதங்கள்- அடவான கைபாக மார் க்கத்தாலே, வாமேதா னறிந்திடவே சித்திமெத்த - வடிவாக வறி யாட்டால் சங்கமாண்டி, நாமேதா னறிந்தவனே சித்தன்சித்தன்- நலமாக வறியாட்டால் யோகியல்ல, சாமேதா னறிந்தவனே புத் திமானுஞ் - சரியாக யின்னதென்று சாத்துவேனே. (291)

சாத்துவேன் லோகத்து வாதிதானுஞ் - சரியாக வாதமொடு வசியந்தானும், பாக்துமே பொய்ப்பாடு மென்பார் லோகர் - பதி வாக வறிந்தவனே சித்தனுவான், காத்துமே யிருந்தாலே யோகி யோகி-கருணைபெற யறிந்தவனே கனகவான்பார். நாத்துநீயறிந்து நட்ட நாட்டம்போல-நாடியே யெல்லாமும் நாடிப்பாரே (292)

நாகரசச் செயநீர்.

நாடியே யின்னமொரு கருவைக்கேளு-நாதாக்க ளாட்டெல் லாஞ் சொல்லக்கேளு, மூடியே சொல்லுகிறே னூற்றுக்கேளு-மூவு லகு சித்தரெல்லா மேன்மையாக, வாடியே நாகமது செயநீராக- வடிவாக நாகமது பலமுமொன்று; கூடியே சூதமது பலமுமொ ன்று - குணமாக நாகமது யுருக்கிடாயே, [293]

உருக்கியே காண்டிதனிற் சூதத்துள்ளே-உணர்வாக விட்டல் லோ வெண்ணெய்குத்தி, நருக்கியே யாறவிட்டு யெடுத்துப்பார்த் தால்-நலமாக புட்டாகுங் கல்வத்திட்டு, பெருக்கியே வீரமதை யிடையேயிட்டு-பேதமா யரைத்துநீ சாமம்நாலு, வருக்கியே நீரா குஞ் செயநீராகும்-வடிவாகு மிந்நீரில் மார்க்கங்கேளே. [294]

துருசிச் செந்தூரம்.

கேளுநீ யிந்நீரிற் பூரமிட்டுக்-கெடியான பீங்கானி லிறுத்துக் கொண்டு, வாளுநீ துருசுதனைத் தோய்த்துத்தோய்த்து-வடி வாகப் போடவே யெட்டுநாள்தான், மாளுமே துரிசியது சிவந்துநிற்கும் வடிவாக வதின்மேலே கவசங்கட்டு, காளுமே வண்டமது சுன்னம் பண்ணிக்-கனிவாக வரைத்துமே துரிசிமேலே. [295]

மேலாகக் கட்டியே காயவைத்து-மெதுவாகக் காடையென்ற புடத்தில்வைத்து, காலாக வெடுத்துப்பார் செந்தூரமாகுங்- கனமான வருணன்போ லாகுமப்பா, நாலாக சூதமது பலமும் நாலு நலமாகத திராவகத்தால் பூர்க்கவிட்டு, சாலாகத் துரிசுசெந் தூரத்தோடே-சரியாகச் சேர்த்துநீ யரைத்திடாயே. (296)

அரைத்துநீ கவசமதை வுண்டைபண்ணி - அடைவாகக் காய வைத்துப் பின்புசேளு, பரைத்துமே கிடத்திலிட்டே யெரிந்தா யானல்-பரிவான செந்தூர முருக்கம்பூப்போல், கரைத்துநீ வெள் ளிதான் மூன்றுமாகும் - கனிவாகச் செந்தூரம் ரெண்டுமாகும், முரைத்துநீ யுருக்கிப்பார் தங்கமாகும் - முறையாக யெல்லாமுஞ் ஜெயமுமாமே. (297)

ஆமேதான் தங்கத்தை விற்றுத்தானே-அடைவாகச் செவ்வு பண்ணிப் பசியைத்தீர்த்து, வாமேதா னுண்டுடுத்திவழியைத்தேடி வடிவாக ஞானவழி யடுத்துக்கூடு, சாமேதான் சுழிமுனையை யடு த்துத்தேடு - சரியான லோகமது கண்டாற்சேரும், பாமேதான் யெல்லாமுஞ் சித்தியாகும்-பதிவாகச் சகலசித்தும் பண்புமாமே []

ஆமேதான் மண்டலத்தி லந்திசந்தி- அடவாக வுண்டிடவே நோய்கள்போகும், நாமேதான் வாதத்தின் ரோகம்போகும்-நல மான பித்தசிலேற் பனங்கள்போகும், வாமேதான் வாதசித்தி யுடனேயாகும் - வடிவாகக் காயமுதல் வண்மையாகும், சாமேதான் சொன்னபடி யெல்லாந்தீருஞ்-சரியாகப்போகுமே தன்மைதானே.

தானகை நோயெல்லாந் தவுடுபொடியாகுந்-தாஷ்டிகமாய் நரை திரைக ளற்றுப்போகும், வானகை விதுலெகுவு முன்னேயாரு-வடிவாகச் சித்திதரும் வண்மைமெத்த, தானகை நோய்தீரும் மருந்து வைத்துத்-தாஷ்டிகமா யுண்டிடவே நோய்கள்போகும், வேனை குருவருளாற் சொல்லிப்போட்டேன் - வேதாந்த சாஸ்திரத்தின் விபரந்தாமே. (300)

தாமேதான் கும்மியெழு நூறும்பாடி - தயவாக வைந்நூறும் பாடினேன்பார், வாமேதான் விளங்கவில்லை யென்றுசொல்லி - வடிவாக முந்நூறை வகுத்தேனப்பா, சாமேதான் நோய்தீரும் மருந்து வைத்து - சரியாகப் பார்த்தோர்க்குத் தோணுந்தோணும் நாமேதான் உலகறியச் சொல்லிப்போட்டோம் - நன்மைதரும் முந்நூறு நயமாமுற்றே, [301)

# அகஸ்தியர் வாத சூஸ்திரம் ௩௱

முற்றிற்று.

---

லெக்ஷிமி விலாசம் பிரஸ் சாத்தூர்.

உ

தேளிவு முனிசித்தர்கள் திருவாய் மொழிந்தருளிய
ஞான யோக சாஸ்த்திர ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவில் (வடக்கு ஆடி வீதி,)
மதுரை.

ஸ்தாபகர்:-
ந. சுப்பிரமணியபிள்ளை என்ற ஞானபண்டிதசுவாமி